Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ. 50

பக்கங்கள் 12

சுடர் : 38
கதிர் : 03

செவ்வாய்க்கிழமை 29 நவம்பர் 2022

கார்த்திகை 13 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2053

## பேச்சு ஆரம்பமாக முன்னரே நிபந்தனைகள் வேண்டாம்!

### கிடைத்துள்ள சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த முன்வாருங்கள் என்கிறார் ஜனாதிபதி ரணில்



யாழ்ப்பாணம், நவம்பர் 29

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பேச்சு ஆரம்பமாவற்கு முன்னரே நிபந்தனைகளை தமிழர் தரப்பு விதிக்கக்கூடாது. முதலில் பேச்சு மேசைக்கு வாருங்கள் - இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமிழ் அரசியல் தரப்புக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

»11

## 80% வரவு கட்டாயம்

கொழும்பு, நவ. 29

அடுத்த ஆண்டு முதல் க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கு 80 சதவீத பாடசாலை வருகைப் பதிவு அவசியமானது என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

(அ-ஒ-இ)

## மஹவ – யாழ். ரயில் சேவை நிறுத்தப்படும்

கொழும்பு, நவ. 29

குருநாகல் மாவட்டத்தின் மஹவ தொடக்கம் யாழ்ப்பாணம் வரையான ரயில் போக்குவரத்தை 5 மாதங்களுக்கு இடைநிறுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

»11

## தொடரும் காணி சுவீகரிப்பு: மக்கள் எதிர்ப்பால் நிறுத்தம்

யாழ்ப்பாணம், நவ. 29

காரைநகர் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட ஜே/44 கிராம அலுவலர் பிரிவில், 44 குடும்பங்களுக்குச் சொந்தமான 11 ஏக்கர் காணிகளை இராணுவத்துக்கு சுவீகரிப்பதற்காக நில அளவை மேற்கொள்வதற்கு நேற்று மக்கள் எதிர்ப்பு வெளியிட்டனர்.

இதனையடுத்து நில அளவைத் திணைக்களத்தினர் திரும்பிச் சென்றனர்.

(அ-ஒ-27)

## வடக்கில் இ.போ.ச. சேவை இன்று முழுவதும் முடங்கும்

யாழ்ப்பாணம், நவ. 29

தமது பாதுகாப்பை உறுதிப்படுத்தக்கோரி இலங்கைப் போக்குவரத்துச் சபையின் யாழ். சாலையினரால் நேற்றுமுன்னெடுக்கப்பட்ட பணிப்

»11

ஈழத்துச் சிதம்பரத்தில்

## திருவெம்பாவையை குழப்பி பாலஸ்தாபனத்துக்கு முயற்சி

### கடிவாளம் போட்டது நீதிமன்றம்

யாழ்ப்பாணம், நவ. 29

காரைநகர் ஈழத்துச் சிதம்பர ஆலயத்தின் பாலஸ்தாபன முயற்சிக்கு ஊர்காவற்றுறை

»11

## இராணுவம், எஸ்.ரி.எவ். இளைஞர் மீது தாக்குதல்

### மானிப்பாயில் நேற்றிரவு சம்பவம்

யாழ்ப்பாணம், நவ. 29

மானிப்பாய் ஆலடிச் சந்தியில் நேற்றிரவு 8.30 மணியளவில் 28 வயதான இளைஞரை, இராணுவத்தினர், விசேட அதிரடிப்படையினர் இணைந்து கொடூரமாகத் தாக்கியுள்ளனர்.

»11

மாவீரர் நாள்:

## சிங்கள மக்களின் புரிதலுக்கு நன்றி

### கூட்டமைப்பு தெரிவிப்பு

கொழும்பு, நவ. 29

சிங்கள மக்கள் மத்தியில் தமிழர்கள் தொடர்பில் சற்றுப் புரிதல் ஏற்பட்டுள்ளமை மகிழ்ச்சியளிப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்

»11

## வீரியம் குறைந்த உரமே விநியோகம்?

### யாழில் விவசாயிகள் சந்தேகம்

யாழ்ப்பாணம், நவ. 29

கமநல சேவைகள் திணைக்களத்தால் வழங்கப்பட்ட உரம் வீரியம் குறைந்ததாக உள்ளது என்று விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

»11

## வேலியே பயிரை மேய்ந்த கதை

### மதுபோதையில் பொலிஸார் மக்களுடன் சண்டித்தனம்

யாழ்ப்பாணம், நவ. 29

விபத்தை ஏற்படுத்தி விட்டு தப்பிச் செல்ல முற்பட்ட இரண்டு பொலிஸ் அலுவலர்களை மக்கள் மடக்கிப் பிடித்து யாழ்ப்பாணப் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

»11

கனடா பயணம்:

## வியட்நாமில் மீண்டோரில் 85 பேர் நாடு திரும்புவர்

கொழும்பு, நவ. 29

கனடா செல்வதாக சட்டவிரோதமாக அழைத்துச் செல்லப்பட்டு வியட்நாமில் மீட்கப்பட்ட இலங்கையர்களில் 85 பேர் நாடு திரும்ப இணங்கியுள்ளனர் எனவும் அவர்களை அழைத்துவருவதற்கு இலங்கை அரசு நடவடிக்கை

»11

## ஊசிமூலம் ஹெரோய்ன்: 15 வயது மாணவன் சாவு!

யாழ்ப்பாணம், நவ. 29

ஊசிமூலம் உயிர்கொல்லி ஹெரோய்னை பயன்படுத்திய 15 வயது பாடசாலை மாணவன் ஒருவன் மூளை

»11

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்








## நல்லூரில் அமைக்கப்பட்ட நினைவாலயத்தில் அஞ்சலி

யாழ்ப்பாணம், நவ. 29

யாழ். நல்லூரில் தியாக தீபம் திலீபனின் நினைவாலயத்துக்கு அருகில் அமைக்கப்பட்ட மாவீரர்களின் பெயர் பொறிக்கப்பட்ட கல்வெட்டுக்கள் முன்பாக நேற்றுமுன்தினம் மாவீரர்தினம் கடைப்பிடிக்கப்பட்டது. நிகழ்வில் பெருந்திரளான மக்கள், போரில் உயிரிழந்தவர்களின் உறவினர்கள் ஒன்றுகூடி கண்ணீர் மல்க மாவீரர்களை அஞ்சலித்தனர். (ம-20)






### மன்னாரில்...




மாவீரர் தினத்தை முன்னிட்டு மன்னார் பெரிய பண்டிவிரிச்சான் மற்றும் ஆட்காட்டிவெளி துயிலுமில்லங்களில் நேற்றுமுன்தினம் மாலை உணர்வுபூர்வமாக அஞ்சலி நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன. பல்லாயிரம் மக்கள் இந்த அஞ்சலி நிகழ்வுகளில் கலந்துகொண்டனர். (ம-60)



மாவீரர் தினத்தை முன்னிட்டு தென்மராட்சியில் பல வீடுகளில் நேற்றுமுன்தினம் மாலை சுடரேற்றி அஞ்சலிக்கப்பட்டது. அத்துடன் சில ஆலயங்களில் மாலை நேரத்தில் ஆலய மணிகளும் ஒலிக்கவிடப்பட்டன. (ம-131)



வல்வெட்டித்துறை தீருவில்...



மாவீரர் தினத்தை முன்னிட்டு கேணல் கிட்டுவின் சதுக்கத்திலும் அஞ்சலி நிகழ்வுகள் உணர்வுபூர்வமாக முன்னெடுக்கப்பட்டன. (ம-26)

### மாவீரர் துயிலுமில்லங்களில்

# முகம் சுழிக்கவைக்கும் 'செல்பி' மீதான மோகம்



யாழ்ப்பாணம், நவ. 29

மாவீரர் துயிலுமில்லங்களில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சில சம்பவங்கள் முகம்சுழிக்க வைக்கின்றன என்று மாவீரர்களின் உறவினர்களும் தமிழ்த் தேசியப் பற்றாளர்களும் கவலை தெரிவித்துள்ளனர்.

வடக்கு - கிழக்கில் உள்ள மாவீரர் துயிலுமில்லங்களில் நேற்றுமுன்தினம் மாலை மாவீரர் நினைவேந்தல் நிகழ்வுகள் உணர்வுபூர்வமாகக் கடைப்பிடிக்கப்பட்டன. மாவீரர்களை மனதிலிருத்தி அஞ்சலித்து உறவுகள் கண்ணீர் சிந்திக்கொண்டிருந்த வேளையில் சிலர், அந்த நிகழ்வின் கனதித் தன்மையைத் தெரியாதவர்களாய் செல்பி, ரிக்ரொக் என நவயுக களியாட்டக் கலாசாரத்தில் ஈடுபட்டனர்.

இது மிகவும் அருவருக்கத்தக்க செயல் என்று தெரிவித்துள்ள தமிழ்த் தேசியப் பற்றாளர்கள் மாவீரர் தினம் என்பதன் புனிதத் தன்மையை உணர்ந்தவர்களாக அனைவரும் இந்த அஞ்சலி நிகழ்வில் கலந்துகொள்ள வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளனர்.

மாவீரர் துயிலுமில்லங்களுக்கு மிக அருகாக முன்னெடுக்கப்பட்ட திடீர் விற்பனை நிலையங்கள் மற்றும் நடைபாதை வியாபாரங்களும், நிகழ்வின் முக்கியத்துவத்தை தவிடுபொடியாக்க வல்லன என்றும் சுட்டிக்காட்டியுள்ள தமிழ்த் தேசியப் பற்றாளர்கள் இத்தகைய செயல்களை ஒருபோதும் அனுமதிக்க முடியாது என்று கண்டனமும் தெரிவித்துள்ளனர். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டங்கள் பற்றி யாரும் எனக்கு பாடமெடுக்கத் தேவையில்லை!

## சொல்கிறார் ஆளுநர்

யாழ்ப்பாணம், நவ. 29
வட மாகாண ஆளுநர் என்ற வகையில் மக்கள் நலன் சார்ந்த அபிவிருத்தி திட்டங்களுக்காக சட்டங்களை நிறைவேற்றுவேன் என வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்துள்ளார். ஆளுநர் செயலகத்தால் அனுப்பி வைக்கப்பட்ட ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடமாகாண ஆளுநர் சட்டவிரோதமாக இரண்டு நியதிச்சட்டங்களை உருவாக்கியுள்ளதாக பல்வேறு தரப்புக்களும் சுட்டிக்காட்டியதுடன், மூத்த நிர்வாக சேவை அதிகாரியும் மக்களால் தெரிவு செய்யப்பட்ட வடக்கு மாகாண சபையின் அவைத்தலைவருமான சி.வீ.கே.சிவஞானம் இது தொடர்பில் ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு சென்றுள்ளதாகவும், வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாகவும் தெரிவித்திருந்த நிலையிலேயே ஆளுநர் மேற்படி அறிக்கையை அனுப்பி வைத்துள்ளார்.

'ஆளுநர் தான் நினைத்தபடி நியதிச் சட்டங்களை உருவாக்கி வர்த்தமானி வெளியிடுகிறார் என சிலர் தம்மை மக்கள் மத்தியில் தலைவர்களாகக் காட்ட முயல்கின்றனர். வடமாகாண சபை செயற்பாட்டில் இல்லாத காலத்தில் மக்கள் நலன் சார்ந்த பல நியதிச் சட்டங்கள் ஏற்கனவே உருவாக்கப்பட்டு செயற்படுத்தாமல் உள்ளன. ஆளுநரின் அதிகாரத்தின் கீழ் மாகாண சபையொன்றுக்கு நியதிகளை இயற்றும் அதிகாரம், அவற்றில் உள்ள விடயங்கள் தொடர்பான நிறைவேற்று அதிகாரம், அந்த மாகாண சபை உருவாக்கப்பட்ட மாகாண ஆளுநரால் நேரடியாகவோ அல்லது அமைச்சர்கள் சபையின் அமைச்சர்கள் மூலமாகவோ அல்லது கீழ்நிலை அதிகாரிகள் மூலமாகவோ செயற்படுத்தப்படும். அதைத்தான் அரசமைப்புச் சட்டமும் சொல்கிற நிலையில் ஒவ்வொரு சட்டமும் மாகாண நிர்வாகத்தின் மூலம் செயற்படுத்தப்படுகின்றன. பல சட்டங்கள் பல ஆண்டுகளாக முடிக்கப்படாமல் உள்ள நிலையில் சிலருக்கு மறுபரிசீலனை தேவைப்படுவதோடு தமது அதிகார வரம்பு தெரியாமல் பேசுகின்றனர். 'ஆளுநர் என்ற வகையில் வடக்கு மக்களுக்கான அபிவிருத்திகளை மேற்கொள்ள உரிய சட்டங்களைச் செயற்படுத்துவேன். யாரும் எனக்குக் கற்பிக்கவேண்டாம்' என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-ஒ-இ)

# வடக்கு மாகாணசபையை கேலிக்கூத்தாக்கவேண்டாம்

## முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் தவராசா ஆளுநருக்கு 'அட்வைஸ்'

யாழ்ப்பாணம், நவ. 29
நிறைவேற்றுச் செயற்பாட்டுக்கும் சட்டவாக்க அதிகாரத்துக்கும் வித்தியாசம் தெரியாமல் வடக்கு மாகாணசபையை கேலிக்கூத்தாக்காமல் ஆளுநர் பதவியைத் துறந்து விட்டு வீட்டுக்குச் செல்லவேண்டும் என்று வடக்கு மாகாண சபையின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா தெரிவித்தார்.

வடக்கு மாகாண ஆளுநர் செயலகம் ஊடாக நேற்று வெளியிடப்பட்ட ஊடக அறிக்கைக்கு பதிலடியாகக் கருத்து வெளியிட்ட அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'154சி' பிரிவை மேற்கோள்காட்டி ஆளுநர் சில விடயங்களைக் குறிப்பிட்டுள்ளார். அதில் நிறைவேற்றதிகார செயற்பாடு தொடர்பிலும் சட்டவாக்க அதிகாரம் தொடர்பிலும் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. இவை இரண்டுக்கும் வித்தியாசம் தெரியாமல் ஆளுநர் பேய்க்கூத்தாடுகின்றார்.

ஜனாதிபதியிடம் சகல நிறைவேற்றதிகாரச் செயற்பாடுகளும் உள்ளன. அதற்காக அவரால் சட்டமியற்ற முடியாது. இதனை வடக்கு ஆளுநர் புரிந்து கொள்ளவேண்டும் - என்றார். (அ-ஒ-5)



# யாழ்.சாலை இ.போ.ச.வினர் நேற்றுப் பணிப்புறக்கணிப்பு

## மக்கள் அவதி

யாழ்ப்பாணம், நவ. 29
இலங்கைப் போக்குவரத்துச் சபையின் யாழ். சாலை ஊழியர்கள் நேற்றுத் திங்கட்கிழமை காலை முதல் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர். வசாவிளான் பகுதியில் இலங்கைப் போக்குவரத்துச் சபை பஸ் மோதியதில் மாணவன் ஒருவன் அண்மையில் காயமடைந்தான்.

இதையடுத்து சாரதியொருவர் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. இந்தத் தாக்குதலைக் கண்டித்தே நேற்றுப் பணிப்புறக்கணிப்பு மேற்கொள்ளப்பட்டது. இந்தப் பணிப்புறக்கணிப்பால் யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்துக்கு வந்த வெளிமாவட்ட பேருந்துகள் பேருந்து நிலையத்துக்குள் உள்நுழைய முடியாது காத்திருந்தன.

இ.போ.ச.வினரின் இந்தத் திடீரப் பணிப்புறக்கணிப்பால் அன்றாட தொழில்புரிவோர், அலுவலக ஊழியர்கள், பொது மக்கள் எனப் பலதரப்பினரும் போக்குவரத்துச் சிரமங்களை எதிர்கொண்டனர். (ச-26-20-17)

# உணவுப் பாதுகாப்பு நிலை: மன்னாரில் கலந்துரையாடல்

மன்னார், நவ. 29
நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடியை நிவர்த்திக்கும் வகையில் கிராமப் பொருளாதார மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவுகளையும் கிராமிய புத்தெழுச்சி மையங்களாக அரசாங்கம் அறிவித்து அதன் செயற்பாடுகள் தொடர்பான வேலைத்திட்டங்களை ஆரம்பித்துள்ளது.

அதன்படி மன்னார் மாவட்ட குழுக் கூட்டம் மாவட்டச் செயலர் திருமதி ஸ்ரான்லி டிமெல் தலைமையில் மன்னார் மாவட்ட செயலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

இதன்போது உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்துக்கான ஒருங்கிணைந்த பொறிமுறையின் முன்னேற்றம் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

அத்துடன் சத்துணவைப் பெற்றுக்கொடுக்கும் வழிமுறைகள், வறுமை காரணமாகப் பட்டினியால் வாடும் குடும்பங்களை மீட்டெடுக்கும் வழிவகைகள், சிறுவர்களின் போஷாக்கு முதலான பல விடயங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டதுடன் வீட்டுத் தோட்டப் பயிர்ச்செய்கையை ஊக்குவிப்பது தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட்டது. (ச-213)

# கோடாவுடன் பெண் கைது

நெல்லியடி பொலிஸ் பிரிவுக் குட்பட்ட குடவத்தைப் பகுதியில் கோடாவை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் 31 வயதான பெண்ணொருவர் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

நெல்லியடி பொலிஸாருக்குக் கிடைத்த புலனாய்வுத் தகவலின் அடிப்படையில் கைது இடம்பெற்றது. சந்தேகநபரிமிருந்து 38.5 லீற்றர் கோடாவைப் பொலிஸார் மீட்டனர். சந்தேகநபரை பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-125)

# பருவகால மழை இல்லாது பெரும்போகம் அழிவடைவு

## விவசாயிகள் கவலை



கிளிநொச்சி, நவ. 29
மழை இல்லாமையால் பயிர்கள் அழிவடையும் நிலை ஏற்பட்டுள்ளது என கிளிநொச்சி மாவட்டத்தில் பெரும்போகப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுவரும் விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

இந்தாண்டுக்கான பெரும்போகப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டு 45-50 நாள்கள் ஆகின்றன. ஆனால் உரிய நேரத்தில் மழை கிடைக்கப்பெறாமையால் பயிர்கள் அழிவடையும் நிலையில் உள்ளன.

ஒவ்வொரு வருடமும் இந்தக் காலப்பகுதியில் கடும் மழை காரணமாக பயிர்கள் அழிவடைந்து வந்த நிலையில் இந்த வருடம் மழை இல்லாத காரணத்தால் மானாவாரி பயிர்ச்செய்கையில் மேற்கொள்ளப்பட்டுள்ள பல ஏக்கர் வயல் நிலங்கள் அழிவடையும் தறுவாயில் காணப்படுகின்றன.

கடந்த சிறுபோக பயிர்செய்கை மேற்கொள்ளப்பட்ட நெல்மூடைகளே விற்பனை செய்ய முடியாத நிலையில் உள்ளன. இந்நிலையில் தற்போது மழையின்றி பெரும்போகப் பயிர்ச்செய்கை அழிவடைவதால் பயிர்ச்செய்கையை கைவிட வேண்டிய அவலநிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். எனவே பயிரழிவை ஈடுசெய்ய உரிய அதிகாரிகள் இழப்பீடு பெற்றுத்தர வழிவகை செய்யவேண்டும் - என்றனர். (ச-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# தேசியமட்டக் கால்பந்தாட்டம் மகாஜனக் கல்லூரி சம்பியன்!

யாழ்ப்பாணம், நவ. 29

**தேசியமட்டக் கால்பந்தாட்டத் தொடரில் 17 வயது மற்றும் 20 வயதுப் பெண்கள் பிரிவில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணி கிண்ணம் வென்றது.**

**20 வயதுப்பிரிவு**

கொழும்பு ரேஸ் ஹோர்ஸ் மைதானத்தில் அண்மையில் இந்த இறுதியாட்டம் இடம்பெற்றது.

இதில் மகாஜனக் கல்லூரி அணியும் குருநாகல் பெண்கள் மலியதேவ மகா வித்தியாலயமும் மோதின. 2:0 என்ற கோல் கணக்கில் முதல்பாதியில் முன்னிலை வகித்த மகாஜனக் கல்லூரி அணி இரண்டாவது பாதியில் தனது ஆதிக்கத்தை நிலைப்படுத்தி முடிவில் 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. அணியின் உபதலைவி கிரிசாந்தினி மூன்று கோல்களையும் பதிவுசெய்தார்.

**17 வயதுப்பிரிவு**

கொழும்பு களனிய பிரதேசசபை மைதானத்தில் அண்மையில் இடம்பெற்ற 17 வயதுப் பெண்கள் பிரிவு இறுதியாட்டத்தில், பொலனறுவை பண்டிவெள மகா வித்தியாலயத்துடன் மோதியது. 2:0 என்ற கோல் கணக்கில் மகாஜனா சம்பியனானது. இரண்டு கோல்களையும் அணித்தலைவி லயன்சிகா பதிவுசெய்தார். (ம-125)

## ஆசிரியர் கலாசாலையின் ஆரம்பக்கல்வி நிகழ்வு

கொடிகாமம், நவ. 29

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை ஆரம்பக்கல்வி மன்றம் நடத்தும் ஆரம்பக்கல்வி விழா கலாசாலையின் ரதிலக்சுமி மண்டபத்தில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.


கலாசாலையின் அதிபர் வீ.கருணலிங்கம் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் ஆரம்பக்கல்வி மாணவர்களின் ஆற்றுகை நிகழ்வுகளும் போட்டிகளுக்கான பரிசளிப்பும் இடம்பெறும். (ய-159)

## போட்டி முடிவுகள்

சாவகச்சேரி, நவ.29

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு, 'அறிவார்ந்த சமூகத்துக்கான வாசிப்பு' என்னும் தொனிப்பொருளில் சாவகச்சேரி நகரசபையின் நுணாவில் பொதுநூலகத்தால் பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட போட்டிகளின் முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

போட்டிகளில் வெற்றியீட்டியவர்களின் பெயர்ப்பட்டியல் நூலகத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதுடன் மாணவர்களின் பாடசாலைகளுக்கும் அனுப்பப்பட்டுள்ளன. (ய-9)





## டெங்கை ஒழிக்க மன்னாரில் சிரமதானம்

மன்னார், நவ. 29

மன்னார் மாவட்டத்தில் அதிகரித்து வரும் டெங்குப் பரவலைக் கட்டுப்படுத்தும் முகமாக சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மன்னார் பிராந்திய சேவைகள் பணிப்பாளர் ரீ.வினோதனின் தலைமையில் கடந்த இரு வாரங்களாக இந்தச் சிரமதானப் பணிகள் இடம்பெற்று வருகின்றன. நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மன்னார் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்குட்பட்ட தோட்டவெளி கிராமத்தில் அந்தப் பகுதி மக்களின் பங்கேற்பில் பெருமளவு இடங்கள் துப்புரவாக்கப்பட்டன. (ச-213)

## விவசாயிகளுக்கு உரவிநியோகம்

யாழ்ப்பாணம், நவ. 29

நுணாவில் மேற்கு கமக்கார அமைப்புக் குட்பட்ட விவசாயிகளுக்கு 2ஆம் மற்றும் 3ஆம் கட்ட உரம் விநியோகிக்கப்படவுள்ளது என நுணாவில் மேற்கு கமக்கார அமைப்பு அறிவித்துள்ளது.

அதன்படி எதிர்வரும் 30ஆம் திகதி புதன்கிழமை புத்தூர் சந்தி கமநலசேவை நிலையத்தில் காலை 9மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரை உரம் வழங்கப் படவுள்ளது.

விவசாயிகள் வருகைதரும்போது ஏக்கர் வரி கட்டிய பற்றுச்சீட்டு, அடையாள அட்டை ஆகியவற்றை எடுத்துவருமாறு நுணாவில் மேற்கு கமக்கார அமைப்பினர் அறிவித்துள்ளனர். (ச-9,159)

## இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** காரிய அனுகூலமான நாள். புதிய முயற்சிகளை மேற்கொள்வதற்கு உகந்த நாள். தேவையான பணம் கையில் இருப்பதால் செலவைச் சமாளிப்பதில் சிரமம் எதுவும் இருக்காது.

**இடபம்:** எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும். சிலருக்கு பிள்ளைகள் மூலமும் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. வாழ்க்கைத்துணையால் செலவுகள் ஏற்படும். வீண்விவாதத்தைத் தவிர்க்கவும்.

**மிதுனம்:** புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். வழக்கமான பணிகளில் மட்டுமே கவனம் செலுத்தவும். சிலருக்கு மனதில் இனம் தெரியாத சோர்வு உண்டாகலாம்.

**கடகம்:** தந்தைவழி உறவுகளால் சங்கடம் ஏற்படக்கூடும். தந்தையின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. சகோதரர்களால் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும்.

**சிம்மம்:** அதிர்ஷ்டகரமான நாள். இன்று நீங்கள் எடுக்கும் புதிய முயற்சி வெற்றிகரமாக நிறைவேறும். தொடங்கிய காரியங்கள் அனுகூலமாக முடியும். உங்களுடைய முயற்சி வெற்றியளிக்கும்.

**கன்னி:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டாலும் தேவையான பணம் இருப்பதால் சமாளித்துவிடுவீர்கள். பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**துலாம்:** உற்சாகமான நாள். முக்கியமான முடிவுகள் எவற்றையம் இன்று எடுக்கவேண்டாம். தாயாரின் உடல் நலனில் கவனம் தேவை. உங்கள் முயற்சிகளுக்கு ஆதரவு கிடைக்கும்.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். சகோதர வகையில் எதிர்பார்க்கும் காரியம் முடிவதில் தாமதம் உண்டாகும். வயிற்றுப் பிரச்சினைகள் ஏற்படும்.

**தனுசு:** எதிர்பாராத பணவரவுடன், திடீர் செலவுகளும் ஏற்படும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**மகரம்:** புதிய முயற்சிகளைத் தொடங்குவது சாதகமாக முடியும். தாயின் உடல் நலனில் கவனம் தேவை. ஆரோக்கியக்குறைவு ஏற்பட்டு சரியாகும். பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**கும்பம்:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். காரியங்களில் வெற்றி உண்டாகும். புதிய முயற்சிகளை தொடங்குவது நல்லது. எதிர்பார்த்த காரியம் சாதகமாக முடியும்.

**மீனம்:** பொறுமையுடன் இருக்கவேண்டிய நாள். எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்க நேரிடும். முக்கியமான முடிவுகளை ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து எடுப்பது நல்லது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## மாவீரர் நாள் அஞ்சலிப்பு களியாட்டக் கலாசாரமல்ல

தமிழர் தாயகத்திலுள்ள பல்வேறு மாவீரர் துயிலுமில்லங்களிலும் மாவீரர் நினைவேந்தல் நேற்றுமுன் தினம் உணர்வுபூர்வமாகக் கடைப்பிடிக்கப்பட்டிருக்கின்றது. மைத்திரி – ரணில் அரசாங்கத்தின் ஆட்சிக்குப் பின்னர் ஒரு மாவீரர் நினைவேந்தல் உச்சபட்ச உணர்வெழுச்சியுடன் கடைப் பிடிக்கப்பட்டிருக்கின்றது என்றால் அது இம்முறைதான். கல்லறை மேனியர்களின் நினைவுகளை, அவர்களின் தியாகங்களை உரிய மாட்சியுடன் எழுச்சிபெற வைத்த அனைவரும் இதில் பாராட்டப்பட வேண்டியவர்கள். 'இதுவொரு காலக்கடமை' என்ற பொறுப்புணர்வுடன் கலந்த ஓர்மம்தான் நினைவேந்தல்கள் இம்முறை இவ்வளவு எழுச்சிபெற்றமைக்குக் காரணம். அதில் விவாதிக்கவோ அல்லது இரண்டாவது கருத்தாடலுக்கோ இடமில்லை.

ஆனால், நினைவேந்தல்களில் நடந்த சில நிகழ்வுகள் எம்மை சுயபரிசீலனை செய்துகொள்ள வேண்டிய அவசியத்தை உணர்த்தியுள்ளது. ஏனெனில், சில மாவீரர் துயிலுமில்லங்களுக்கு அருகில் இடம்பெற்ற சம்பவங்கள் உண்மையில் பேரினவாதப் பூதங்களின் ஆக்கிரமிப்பை விடவும் அருவருக்கத்தக்கவை மோசமானவை. பண்டிகைக்காலங்களில் நடைபாதை வியாபாரங்கள் வருவதுபோன்று நேற்றும் பல மாவீரர் துயிலுமில்லங்களுக்கு மிக அருகாக 'தற்காலிக வியாபாரத்தலங்களும்', 'நடைபாதை வியாபாரங்களும்' முன்னெடுக்கப்பட்டன. மாவீரர்களின் தியாகத்தையும் அவர்களுக்கான அஞ்சலிகளையும் ஒட்டுமொத்தமாக சிதைத்தெறியும் தன்மையானவை இந்த நடவடிக்கைகள். புலிகளின் ஆயுதங்கள் மௌனிக்கப்படுவதற்கு முன்னர் இடம்பெற்ற நினைவேந்தல்களில் பிரமாண்டத்துடன் இணைந்தாற்போல் ஆத்மார்த்தங்களும் உறைந்திருக்கும். மாலை 5 மணிப்பொழுதிலேயே இதயம் ஏதோ ஒரு சுமையை தானாக ஏற்றுக்கொள்ளும். மனம் பாரமாகும். எவ்வளவுதான் அழுதுவடித்தாலும் அந்தக் கனம் குறையாது. எத்தனை மணிநேரம் கடந்தாலும் கண்ணீர் வடிந்தோடிய பிசுபிசுப்பு மறைந்திருக்காது. இதனாலேயே கார்த்திகை 27ஆம் நாளில் இரவுணவைத் தவிர்க்கும் தாய்மார்கள் ஏராளமானோர் இருந்தனர்; இருக்கின்றனர். இவ்வாறானதொரு நாளில் அதன் ஆத்மார்த்தத்தைச் சிதைக்கும் வகையிலான இந்த வியாபார நோக்கங்கள் ஏன்?

அதைவிட இளையோர் சிலர், ஆத்மார்த்தமான நினைவேந்தலுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில், 'செல்பி' எடுத்தும், பேஸ்புக்கில் நேரலை ஒளிபரப்புச் செய்தும், 'ரிக்ரொக்' செய்தும் துயிலுமில்லங்களின் புனிதத்தை கேள்விக்குட்படுத்தியிருக்கின்றனர். மாவீரர்நாளின் மகத்துவத்தையும், தியாகத்தையும் கொஞ்சமேனும் உணர்ந்திருந்தாலே இப்படியான கேளிக்கைகளில் அவர்கள் ஈடுபட்டிருக்கமாட்டார்கள். ஏனெனில் மாவீரர் நினைவேந்தலென்பது ஒரு கொண்டாட்டம் அல்ல. ஆர்ப்பரிப்புக்குரிய நாளுமல்ல. இவ்வாறிருக்கையில் ஆர்ப்பாட்டங்கள், கொண்டாட்டங்களுக்குரிய விடயங்களை நினைவேந்தல்களில் கொண்டுவருவதற்கு இம்மியும் இடமளிக்கக்கூடாது. ஏனெனில், புலிகளின் ஆயுதங்கள் மௌனிக்கப்பட்ட பின்னரான காலங்களில் முன்னெடுக்கும் நினைவேந்தல்கள் வெறும் அஞ்சலிப்புகளுக்காக மட்டும் முன்னெடுக்கப்படவில்லை. ஒரு மாபெரும் வரலாற்றை – தியாகத்தை – வீரத்தை – தன்னலமற்ற தனத்தை நாம் எமது அடுத்த சந்ததிக்குக் கடத்திக்கொண்டிருக்கின்றோம். வரலாறுகள் கடத்தப்படுவதென்பது கத்திமுனையில் நடப்பதைப்போன்றது. அவ்வளவு நேர்த்தியாகக் கையாளவேண்டிய காரியம் அது.

நினைவேந்தல்கள் முழுக்க முழுக்க எம் உணர்வெழுச்சியுடன் தொடர்புபட்டவை. ஈழப்போராட்டத்தின் எல்லையற்ற தியாகத்தை கொச்சப்படுத்திவிடாதீர்கள். அதுவொன்றுதான் எம்மிடம் எஞ்சியிருக்கின்றது. அந்தக் கலாசாரத்தையும் சிதைத்துவிட்டால் இந்த இனத்தின் இருப்பில் பயனில்லை.

## வடமாகாண மரநடுகை மாதம்

நவம்பர் 2022

"அறச்செயல்களின் மொத்த வடிவம் மரமே. கைமாறு கருதாது, நமக்கும் ஏனைய உயிரினங்களுக்கும் வாரி வழங்குபவை மரங்கள்தான். தன்னை வெட்டுபவனுக்கும் கூட நிழலாய் இருந்து அவனைக் காப்பதும் மரங்களே"

– கௌதம புத்தர்




# இலங்கை மீதான பிடி ஜெனிவாவில் இறுகும்

கொழும்பு, நவ. 29

ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில்; இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை நடைமுறைப்படுத்த இலங்கை நிர்ப்பந்திக்கப்படலாம் என்று இராஜதந்திர வட்டாரங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு சர்வதேச நாணய நிதியத்தைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலைமை ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதன் பின்னணியில் அமெரிக்கா செயற்பட்டமை அனைவரும் அறிந்த விடயமாகும். இந்த நிலையில் ஜெனிவா தீர்மானத்துக்கு அனுசரணை வழங்கிய நாடு என்ற வகையில் குறித்த தீர்மானங்களை நடைமுறைப்படுத்துமாறு இலங்கையை அமெரிக்கா வலியுறுத்தும் என்று நம்பப்படுகிறது. இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, அமெரிக்கத் தலைவர்களுடன் பேச்சு நடத்த இன்று வொஷிங்டனுக்குச் செல்லும் நிலையில், எதிர்வரும் 30ஆம் திகதி அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் அன்டனி பிளிங்டனைச் சந்திக்கும்போது இந்த வலியுறுத்தல் விடுக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ம)

# சர்வதேசப் பொறிக்குள் சிக்கவுள்ளது இலங்கை

### வீரவன்ஸ தெரிவிப்பு

கொழும்பு, நவ. 29

இலங்கையில் கடும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ள நிலையில் அதனைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு தமது பொறிக்குள் இலங்கையைச் சிக்க வைப்பதற்கு இந்தியாவும், மேற்குலகமும் முயற்சிக்கின்றன என்று நாடாளுமன்ற உறுப்பினரான விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"இலங்கை பொருளாதார ரீதியில் பலமிழந்துள்ளது. பலம்பொருந்திய நாடுகள் இலங்கையின் கழுத்தை இறுக்கிப் பிடிக்க முற்படுகின்றன. தமது உபாயத்துக்குள் இலங்கையைக் கொண்டுவருவதற்கு கடும் பிரயத்தனங்களில் ஈடுபட்டுவருகின்றன. தமது நாட்டு ரூபாவை இலங்கையில் செயற்படுத்துவதற்கு இந்தியா முயற்சிக்கின்றது. அவ்வாறு நடந்தால் இலங்கை இந்தியாவின் மாநிலமாக மாறும். மறுபுறத்தில் நாட்டில் போராட்டங்களைத் தூண்டிவிட்டு, அராஜக நிலைமையொன்றை உருவாக்குவதற்கு மேற்குலக நாடுகள் திட்டம் தீட்டுகின்றன. ஆசிரியர்களுக்கான ஆடையில் மாற்றம் வேண்டும் எனக் கூறுவது இந்த நிகழ்ச்சி நிரலின் ஓர் அங்கமாகும்" - என்றார். (ம)

நாளை

30.11.2022
புதன்கிழமை
கார்த்திகை 14

சுபநேரம் : 04.44 - 06.14
ராகுகாலம்: 12.14 - 01.44

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரநடுகை



## பேரியக்கமாக முன்னெடுக்கப்பட வேண்டிய தமிழ்த் தேசிய மக்களின் தலையாய கடமை!

■ சி.நற்குணலிங்கம்

வடமாகாணசபை இயங்கியபோது கார்த்திகை மாதம் மரநடுகை மாதமாகப் பிரகடனம் செய்யப்பட்டது. கார்த்திகை மாதம் எம் மண்ணுக்கு மழை நீரைச் சிந்துகின்ற மாதமாகும். 2014ஆம் ஆண்டுமுதல் எமது வருங்காலத் தலைமுறையின் வளமான வாழ்வையும், எமது மண்ணின் பசுமையையும் பாதுகாக்கும் இந்தச் சூழலியல் செயலானது நடைபெற்று வருகிறது. வருடத்தில் எல்லா நாள்களிலும் மரங்களை நடுகை செய்ய இயலும் எனினும் கார்த்திகை மாத மரநடுகையே தமிழர்களின் தேசிய அடையாளத்துடன் கூடியதாகும். 'ஆளுக்கு ஒரு மரம் நடுவோம், நாளுக்கு ஒரு வரம் பெறுவோம்' என்பது மரநடுகை மாதத்தின் மகுடவாசகமாகும். 'மரங்களை நடுவதற்கான மிகச் சிறந்த காலம் 20 வருடங்களுக்கு முன்னர் இருந்தது. அடுத்த நல்ல நாள் இன்றாகும்' என்ற சீனப் பழமொழிக்கு அமைய, எமது நிலத்தை பசுமை வாய்ந்ததாகவும், இயற்கையின் வனப்பை இரசிப்பதற்குரிய ஓர் இடமாகவும் மாற்ற வேண்டிய பொறுப்பு இந்த மண்ணில் வாழ்கின்ற ஒவ்வொரு குடிமகனுக்கும் உண்டு.

### தொலைநோக்குச் சிந்தனை

மரநடுகை நிகழ்வானது தொலைநோக்குடன்கூடிய உணர்வுபூர்வமான சிந்தனை. நடப்பட்ட மரங்களை பராமரிக்கும் பொறுப்பு எல்லோருக்கும் இருக்கிறது. தெருவோரத்தில் நடப்பட்ட மரம் வாடியுள்ள தென்றால் அதற்கு அயலில் உள்ள வீட்டுக்காரருக்கு ஈரமனமும், பொதுச் சிந்தனையும் இல்லை என்றுதான் அர்த்தம் கொள்ளலாம். மரங்களே எமது ஆதித்தெய்வங்கள். மரங்களை வணங்குகின்ற தொன்மையான வழிபாட்டு முறையைக் கொண்ட நாம் மரங்களை நட்டுப் போற்றும் மாண்பிலிருந்து விலகலாமா? எமது மண்ணின் செழுமையை இற்றைவரை தக்கவைத்திருப்பவை உள்ளூர் மரங்கள்தான். உயிர்ச் செழிப்பின் உயிர்நாடியாய் விளங்குபவை உள்ளூர் மரங்களே.

மரங்களை நடுகை செய்வதோடு தொடர்ச்சியாக அவை பராமரிக்கப்படுவதில் கூடிய கவனம் தேவை. எதிர்காலம் குறித்த நம்பிக்கையான விதைப்பாக பொருத்தமான இடங்களில் பொருத்தமான மரங்கள் நடப்படுவது வரவேற்கத்தக்க விடயமாகும். மரங்கள் அழிவது, அழிக்கப்படுவது கவலைக்குரிய விடயமாகும். இயற்கையை அழிப்பது சுலபம். இயற்கையை அழித்தால் இயற்கையால் நாம் அழிவோம் என்ற பாடத்தை நன்கு கற்றுக்கொள்ள வேண்டும். இப்போது சூழல் பாதுகாப்பினதும், மரநடுகையினதும் அவசியம் அதிகம் உணரப்பட்டுள்ளது. எமது சுற்றாடலை பசுமையாகவும், அழகாகவும் பேணுவதன்மூலம் ஆரோக்கியமான வாழ்வை வாழலாம். மரங்களை நடுவது எம் தேசத்தை குளிரச் செய்யும் சூழலியல் செயலாகும்.

### இயற்கைச் சமநிலையை இழக்காதிருப்போம்!

ஒவ்வொரு ஜீவராசிகளும் உயிர்வாழ நல்ல சுத்தமான காற்று அவசியம். எமது உடலில் உள்ள குருதி சுத்தமடைந்து அதிலுள்ள கழிவுகளைக் கரியமில வாயுவாக மாற்ற நல்ல பிராணவாயு நிறைந்த காற்றை சுவாசிக்கவேண்டும். செடி, கொடி, படர் தாவரங்கள், சிறிய, பெரிய மரங்களின் இலைகள் யாவும் சுவாசத்தில் ஈடுபடும்வேளை காற்றில் உள்ள கரியமிலவாயுவை ஏற்றுக்கொண்டு பிராணவாயுவை வெளிவிடுவதால் மனிதன் அதன் சுவாசத்தின்மூலம் நீண்ட ஆயுளைப் பெற்று வாழ்கின்றான். இவ்வாறிருக்க நாம் இவற்றை அழிப்பது எந்த அளவுக்கு அறிவுபூர்வமான விடயமாகும். இலவசமாக ஆயுளை நீடிக்க வாய்ப்புள்ளபோது அதைவிடுத்து தாவரங்களை அழிப்பது எந்த அளவுக்கு கீழ்த்தரமான விடயம் என்பதை உணர்ந்து வாழவேண்டும். வாழ்வியல் காலத்தை சுருக்கிக்கொள்ள நாமே காரணமாக இருக்கக்கூடாது.



சூழலுடன் நேரடியாகவும், மறைமுகமாகவும் இடைத்தாக்கம் செய்துகொண்டு வாழ்ந்துவரும் மனிதன் சிந்தனையற்ற முறையில் பசுமையான காடுகளை அழித்து வருகின்றான். தொடர்ச்சியாக அழிக்கப்படுமாயின் ஒரு காலத்தில் அவ்விடம் பாலைவனம்போல் காட்சியளிக்கும். அழிக்கப்படுவதால் ஒட்சிசன் வாயு குறைவடையும். மனிதன் சீவிக்க வேண்டும் எனில் ஒரு நாளைக்கு மூன்று சிலிண்டர் செறிவான ஒட்சிசன் வாயுவை சுவாசிக்க வேண்டும். காடுகள் அழிக்கப்படுவதுடன் நிற்காது சிலர் நெருப்பும் வைக்கிறார்கள். இதனால் ஏற்படும் தீச்சுவாலையால் ஏற்கனவே பாதிப்பு அடைந்துள்ள ஓசோன் படலம் மேலும் அழிவுக்கு உட்படுகின்றது. சுற்றுச் சூழலியல் என்ற கோட்பாட்டை ஒழுங்காகப் பின்பற்றாது போனமை அதன் குறிக்கோள்களின் உண்மையான நோக்கங்களிலிருந்து விலகிச் செல்லக் காரணமாகிறது. சூழலின் இயற்கைச் சமநிலையைப்பற்றி பூரணமாக அறியாமல் இருப்பதும் இந்த அழிவுக்குக் காரணமாகும்.

'பொருள்களின் உண்மையான இயல்புகளை நாம் சரியாகக் கருத்திற்கொண்டால் ஒவ்வொரு மரமும் தங்கத்தினாலோ, வெள்ளியினாலோ ஆக்கப்பட்டிருப்பதைவிட அது பச்சையாக இருப்பதே அதி உன்னதமானது' என்கிறார் ஜேர்மனிய கத்தோலிக்க மத குரு மார்ட்டீன். மூதாதையர்களிடமிருந்து நாம் கற்கவேண்டிய பாடம் ஒன்று உண்டு.

அதாவது அவர்கள் மரம், செடி, கொடி என்பவற்றுடன் 'சகவாழ்வுக் கொள்கை'க்கு இசைவாக வாழ்ந்தனர் என்பதாகும். இது அகில இயற்கைத் தத்துவமாகும். நவீன மனிதன் இந்தக் கொள்கையிலிருந்து மாறுபட்டதன் விளைவே சமகால வாழ்வியலுக்கு அச்சுறுத்தலாகவுள்ளது. இது ஒரு பாதகமான பின்னணியாகும். நிலைதகு வாழ்வுக்கு தாவரங்களை முகாமைத்துவப்படுத்த உணர்வுபூர்வமாக ஆர்வம் காட்டவேண்டும். எதை, எப்போது, செய்யவேண்டும், எப்படிச் செய்யவேண்டும் என நாம் சிந்திக்கத் தொடங்கினாலே எமக்குள் எதையும் நியாயமாக நேர்மையுடன் ஒழுக்கத்துடன் செய்யவேண்டும் என்ற பக்குவம் ஏற்படும். மரங்களின் நடுகையை பேரியக்கமாக முன்னெடுக்க வேண்டும். தொடரட்டும் மரநடுகை. ■



மரநடுகை மாதத்தை முன்னிட்டு, கொடிகாமம் பனை தென்னைவள கூட்டுறவு சங்கவளாகத்தில் மரநடுகை அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வில் யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் சந்திரசேகரன் கூட்டுறவுப் பரிசோதகர் இ.சுரேஷ் ஆகியோர் கலந்துகொண்டு மரக்கன்றுகளை நட்டனர். (ய-159)

# பாரம்பரியங்களைத் தழுவி வள்ளுவர்புரத்தில் வயல்

முல்லைத்தீவு, நவ. 29

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவுக்குபட்ட வள்ளுவர்புரத்தில் வயல்விழா அண்மையில் இடம்பெற்றது.

முல்லைத்தீவு விவசாயத்திணைக்களத்தின் வழிகாட்டலில் 'கிராம மட்டத்தில் வலுவூட்டலுடன் கூடிய விழிப்புணர்வு மூலம் உற்பத்தியை அதிகரித்து தன்னிறைவுப் பொருளாதாரத்தை அடைதல்' எனும் தொனிப்பொருளில் மாணிக்கபுரம் விவசாயப் போதனாசிரியர் ஆ.யதுர்சன் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.



நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியைத் தீர்க்கும் முகமாக தரிசுநிலங்களை விவசாய நிலங்களாக மாற்றுதல், ஏர்க்கலப்பையைப் பயன்படுத்தி பாரம்பரிய ரீதியிலான விவசாயத்தை மேற்கொள்ளுதல், சேதன முறையிலான நோய் பீடைக் கட்டுப்பாட்டு நுட்பங்கள் மற்றும் பயிர் முகாமைத்துவம் ஆகியவற்றை உள்ளடக்கியதாக இந்த வயல் விழா இடம்பெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக முல்லைத்தீவு மாவட்டச் செயலர் க.விமலநாதன், சிறப்பு விருந்தினராக புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் சி.ஜெயகாந்த் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'றோ' வின் தலைவர் பஸிலுடனும் பேச்சு?

இலங்கைக்கு அண்மையில் பயணம் மேற்கொண்ட இந்தியாவின் பிரதான உளவு அமைப்பான 'றோ' அமைப்பின் தலைமை நிர்வாகி சமந்த் கோயல், பஸில் ராஜபக்ஸவுடனும் பேச்சு நடத்தியுள்ளார் எனத் தகவல்கள் கசிந்துள்ளன.

இதுதொடர்பில் கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் பெரமுனவின் செயலாளர் சாகர காரியவசத்திடம் கேள்வி எழுப்பப்பட்டது. அதற்குப் பதிலளித்த அவர், "பஸில் ராஜபக்சவை சந்திப்பதற்கு எவருக்கும் தடை இல்லை. அவருடன் எவரும் பேச்சு நடத்தலாம்" - என்றார்.

நாட்டில் ஏற்பட்ட அரசியல் குழப்பத்தால் அமெரிக்கா சென்றிருந்த பஸில் ராஜபக்ச கடந்த 20 ஆம் திகதி நாடு திரும்பினார்.

(ச-44)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 21 . 02 . 1981

இறப்பு 09 . 12 . 2021

காரைநகர் புதுவீதியை
பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட

**அமரர் அருட்சோதி கிருஷ்ணராஜா**

இதயத்தில் பங்கு தந்து
எளிமையில் அழகமைத்து
நேர்மையில் சிகரம் காட்டி
எம்மை நினைவு
நூலாய் பின்னி நிற்கும்
நேசமிகு கிருஷ்ணனே....
நீ மறைந்து விட்டாலும்
உன் நினைவுகளோடு
வாழ்ந்துகொண்டிருப்போம்.

நினைவுகளுடன்....

(CS 22014)1-6

குடும்பத்தினர்.

## தென்னம்பிள்ளைகள் விற்பனைக்கு

எம்மிடம் குறைந்த காலத்தில் பயன் தரக்கூடிய தென்னம் நாற்றுக்களும் மற்றும் நல்லின தென்னம்பிள்ளைகளும் விற்பனைக்குண்டு.
(வாகன வசதி செய்து தரப்படும்)

077 659 2044

## பெயர் மாற்றம்

இல.9/4, மத்திய கிழக்கு வீதி, குருநகர் யாழ்ப்பாணத்தில் வசிக்கும் **டக்ளஸ் நிலோபர்** ஆகிய நான் எனது பெயரை **சதீஸ்குமார்** என மாற்றம் செய்வதோடு. இனிவரும் சகல ஆவணங்களிலும் **சதீஸ்குமார்** என்றே கையொப்பமிடுவேன் என இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

(cs.47897) (2..6)

**சதீஸ்குமார்**

## வீடு வாடகைக்கு

கனகரட்ணம் வீதி, 1 ஆம். ஒழுங்கையில் தளபாட வசதிகளுடன் வீடு வாடகைக்குண்டு. நிறுவனம்/ களஞ்சிய பாவனை அல்லது மாணவர்கள் குழுவாகத் தங்கியிருப்பதற்கு மட்டும் வழங்கப்படும்.

075 979 9161, 077 619 6145

## துயர் பகிர்கின்றோம்



எமது கல்லூரியின் உப அதிபர்
**திரு.விமலநாதன்** அவர்களின் அன்பு மாமியார்
**முத்துகுமாரு இராஜலட்சுமி**
அவர்கள் கடந்த (21.11.2022) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார். அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் வட்டம்**
**யா/ யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.**

## பெயர் மாற்றம்

சுன்னாகம் கிழக்கு, சுன்னாகத்தில் வசிக்கும் **சின்னத்துரை மகாலிங்கம்** ஆகிய நான் எனது பெயரை **சின்னத்துரை சுப்பிரமணியம்** என மாற்றம் செய்வதோடு. இனிவரும் சகல ஆவணங்களிலும் **சின்னத்துரை சுப்பிரமணியம்** என்றே கையொப்பமிடுவேன் என இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

(cs.47896) (2x6) 2

**சின்னத்துரை சுப்பிரமணியம்**

## மரண அறிவித்தல்



பிறப்பு 17 . 07 . 1936

இறப்பு 28 . 11 . 2022

# தர்மலிங்கம் வீரசிங்கம்

(ஓய்வுபெற்ற தபால் ஊழியர் மற்றும் தாவடி அம்பலவாண வேதவிநாயகர் ஆலய முன்னாள் தர்மகர்த்தா சபை தலைவர்)

தாவடி வடக்கு, மாரியபுலத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் வீரசிங்கம் நேற்று (28.11.2022) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தர்மலிங்கம் - இராசம்மா தம்பதியரின் இளைய மகனும், காலஞ்சென்ற நாகலிங்கம் - செல்லம்மா தம்பதியரின் மருமகனும், அன்னலட்சுமியின் அன்புக் கணவரும், எழிலரசி (U.K), இளங்கோ (U.K), ஜெயரூபி (ஆசிரியை - சுண்டிக்குழி மகளிர் கல்லூரி), அகிலன் (U.K) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவகுமார் (U.K), தயாபரன் (ஆசிரியர் - யா/ சென். ஜோன்ஸ் கல்லூரி), ஹம்சினி (U.K), பிரபாஜினி (U.K), ஆகியோரின் மாமனாரும், ஹரிஹராஷ், ஹம்சிகா, தரணிகா, வைசாலி, வைசனா, ஹம்சிகன், ஆதீப் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற ரத்தினம், பராசக்தி, கனகாம்பிகை, இராஜேஸ்வரி ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற மகேஸ்வரி, குலசேகரம், கமலேஸ்வரி, தர்மராஜா, இராசலிங்கம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 01.12.2022 வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
077 055 2725
076 725 3450

(CS 22012) (2.6)

## மரண அறிவித்தல்



பிறப்பு 26 . 03 . 1946

இறப்பு 28 . 11 . 2022

# கனகசபை இராஜேஸ்வரன்

(ஓய்வுபெற்ற சிரேஷ்ட தொழில்நுட்ப உதவியாளர், நீர்ப்பாசன திணைக்களம்)

காரைநகர் பயிரிக்கூடலைப் பிறப்பிடமாகவும் 66, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட கனகசபை இராஜேஸ்வரன் நேற்று (28.11.2022) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தப்பு கனகசபை - இராசம்மா தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும், காலஞ்சென்றவர்களான கணேசன், தியாகராஜா, பாலசுப்பிரமணியம், சிதம்பரநாதன், கருணாகரன், ஆனந்தராஜா, கோபாலன், நாகரட்ணம் மற்றும் திருமதி நவமணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், செல்வமலரின் அன்புக் கணவரும், செல்வகுமார் (அதிபர், நீர்கொழும்பு றோமன் கத்தோலிக்க வித்தியால்யம்), இராஜ்குமார் (ஆசிரியர் -ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம்), பத்மபிரியா (ஆசிரியர் / யாழ். இந்து மகளிர் கல்லூரி), ஆகியோரின் அன்புத் தந்தையும், பத்மஜா (பல் வைத்திய நிபுணர் - கொழும்பு தேசிய வைத்தியசாலை), வளர்மதி (ஆசிரியர்- யாழ் / இந்து மகளிர் கல்லூரி), சுதர்ஷன் (பிரதேச செயலாளர் - யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், அபிஷயன், அக்ஷயன், அக்ஷரன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இன்று (29.11.2022) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**66, ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**செல்வகுமார் - 077 355 0298**
**இராஜ்குமார் - 076 629 5226**

தகவல்:
குடும்பத்தினர்

(CS 22011) (2.6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டயனாவுக்குப் பயணத்தடை!

இராஜாங்க அமைச்சர் டயனா கமகே வுக்கு மேன்முறையீட்டு நீதிமன்றால் நேற்று வெளிநாட்டுப் பயணத்தடை விதிக்கப்பட்டுள்ளது.

இரட்டைக் குடியுரிமை குறித்து இரா ஜாங்க அமைச்சர் டயனா கமகேவின் கடவுச்சீட்டு, பிறப்புச் சான்றிதழ் மற்றும் தேசிய அடையாள அட்டை தொடர்பாக கடந்த மாதம் பதிவு செய்யப்பட்டிருந்த முறைப்பாடு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது இராஜாங்க அமைச்சர் டயனா கமகேவின் குடியுரிமை தொடர்பான ஆவணங்களைச் சமர்ப்பிக்குமாறு குடி வரவு,குடியகல்வுத் திணைக்களத்துக்கு நீதிமன்று உத்தரவிட்டது. அத்துடன் குறித்த வழக்கு எதிர்வரும் டிசெம்பர் மாதம் 12ஆம் திகதிக்கு தவணையிடப் பட்டது. விசாரணை தினத்தில் டயனா கமகேவை நீதிமன்றில் முன்னிலை யாகுமாறும் நீதிமன்றம் அறிவுறுத்தல் விடுத்துள்ளது. (ச-இ)

# சீன உளவுக் கப்பலுக்கு அனுமதி வழங்கப்படாது

புதுடில்லி, நவ. 29

கடலுக்குள் 200 கடல் மைல்கள் வரை பரவியுள்ள நாட்டின் பிரத்தியேக பொரு ளாதார மண்டலத்துக்குள் சீனாவின் உளவுக் கப்பலான யுவான் வாங்-6 நுழைவதற்கு இந்தியக் கடற்படை இட மளிக்காது என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்தக் கப்பலே இலங்கையின் அம் பாந்தோட்டை துறைமுகத்துக்குள் நுழைந்திருந்தது. தற்போது இந்தி யாவுக்கு அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் தனது பயணத்தை மேற் கொள்வதாக இந்திய ஊடகங்கள் சுட்டிக் காட்டுகின்றன.

இந்தியாவின் ஒடிசா கடற்கரையில் உள்ள அப்துல் கலாம் தீவிலிருந்து இந்தியாவின் ஏவுகணை சோதனை களைக் கண்காணிக்க அனுப்பப்பட் டுள்ள கப்பலே யுவான் வாங் - 6.

2019ஆம் ஆண்டிலும் இதுபோன் றதொரு கப்பல் இந்தியாவுக்கு அரு கில் நிலைகொண்டிருந்தது. இந்தியக் கடற்படை அதனைக் கட்டாயப்படுத்தி வெளியேற்றியிருந்தது.

'சீனக் கப்பலின் ஒவ்வொரு அசை வையும் தொடர்ந்து கண்காணித்து வருகிறோம். எங்கள் ஆளுகைக்கு உட்பட்ட பகுதிகளை சீனக் கப்பல் கண்காணிக்கின்றது. எமது ஆளில்லா வான்வழி விமானங்கள் மற்றும் நீண்ட தூர கடல்சார் கண்காணிப்பு விமானங்கள் ஊடாக, அந்தக் கப் பல் எங்களைக் கண்காணிக்கின்றது என்பதை அறிந்தே வைத்துள்ளோம். அந்தக் கப்பல் சர்வதேச கடற்பரப்பில் இருக்கும் வரையில் எங்களால் ஒன் றும் செய்ய முடியாது. இருப்பினும் இந்தியப் பிரத்தியேக பொருளாதார மண்டலத்துக்குள் நுழைய முயன்றால் நடவடிக்கை எடுப்போம். சாதாரண போர்க் கப்பலாக இருந்திருந்தால் எங்களால் ஒன்றும் செய்யமுடியாது. ஆனால், வெளிநாட்டு ஆய்வு மற் றும் ஆராய்ச்சிக் கப்பல் எங்கள் பிரத்தியேக பொருளாதார மண்டலத் துக்குள் செயற்பட அனுமதிக்க முடி யாது. எங்கள் கடற்கரையை நெருங் கவும் விடமாட்டோம்' என்று இந்தியக் கடற்படையின் மூத்த அதிகாரி ஒருவர் கூறினார்.

'ஆனால். சீனா, இந்தியாவின் அண்டை நாடுகளின் இந்தியாவுடன் கடலைப் பகிர்ந்து கொண்டுள்ள நாடு களின் எல்லைக்குள் நுழைவதற்கு அனுமதி பெற்றாலும் எங்களுக்குப் பிரச்சினைதான். பங்களாதேஷின் சிட்டகொங் துறைமுகத்துக்கோ, இலங்கையின் அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கோ சீனாவின் இந்தக் கப்பல் செல்லுமாக இருந்தால் எமக்கு அது பிரச்சினைதான். இதனால்தான் அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு அந்தக் கப்பல் தரித்து நிற்பதற்கான அனுமதியைப் பெற்றபோது இந்தியா கரிசனைகாட்டியது' என்றும் அந்த அதிகாரி சுட்டிக்காட்டினார். (ஒ-இ)


## வேலைவாய்ப்பு

கொழும்பை தலைமையாக கொண்ட பிரபல நிறுவனம் ஒன்றுக்கு பெண் பணியாளர்கள் தேவை.

- 23 வயதுக்கு மேல்
- கல்வித்தகைமை :
  க.பொ.த.(சா/த) கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி
- வருமானம் கவர்ச்சிகரமானது
- பின்வரும் பிரதேசங்களில் வசிக்கும் பெண் தலைமைத்துவ பெண்கள் / குடும்ப சுமையை சுமக்கின்ற பெண்களுக்கு முன்னுரிமை.

யாழ்ப்பாணம், நெல்லியடி, சுன்னாகம், சாவகச்சேரி, வவுனியா, கிளிநொச்சி

**நிறுவனத்தின் நோக்கம் :**

**பெண்களுக்கான நிதி மேம்பாட்டை மேம்படுத்தல்**

உங்கள் சுயவிபர கோவையை 15.12.2022 ஆம் திகதிக்கு முன்னதாக கீழ்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

**வி/இ - JF/1041**

**C/o உதயன்**

**361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

(CR 7096) 1-8



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 07 - 04 - 1950



மறைவு 09 - 12 - 2021

அமரர்

**வல்லிபுரம் நாகேஸ்வரன் (சிறி)**

(ஓய்வுபெற்ற தொழில்நுட்ப அலுவலர் - வீதி அபிவிருத்தி அதிகாரசபை)

**திதி: 29.11.2022**

ஆண்டு ஒன்று கடந்தாலும்
ஆறிடுமோ உங்கள் நினைவலைகள் அப்பா
உங்கள் நினைவொன்றுதானே
எம்மை நிழலாக தொடர்கின்றது
எங்களை எல்லாம் தவிக்கவிட்டு எங்கு சென்றீரோ
உங்களையே உலகமென
உறுதியாய் நாமிருக்க ஏன்
விண்ணுலகம் நிரந்தரமாய் விரைந்தீரோ
ஓர் ஆண்டு கடுகதியில்
கரைந்தோடி சென்றாலும்
உங்கள் நினைவுகள் கல்மேல்
பொறித்த எழுத்துகள் போல்
எங்களை விட்டு அகலவில்லை
ஓராயிரம் வருடங்கள் ஆனாலும்
உங்கள் நினைவாய்
- வாழ்ந்திடுவோம் அப்பா!

"சிறிநிவாஸ்"
நுணாவில் கல்வயல் வீதி,
நுணாவில் மத்தி, சாவகச்சேரி.

நினைவுகளுடன்
குடும்பத்தினர்


# வாழ்வாதார நெருக்கடியே போராட்டத்துக்குக் காரணம்

### அரசாங்கத்துக்கு எதிராக ஹிருணிகா பளார் கருத்து

நாட்டு மக்களின் வாழ்க்கை தற்போது பெரியதொரு அச்சுறுத் தலை எதிர்கொண்டுள் ளது. அதன் காரண மாகவே அப்பாவி மக் கள் வீதியில் இறங்கி ப்போராடும்நிலை ஏற் பட்டுள்ளது என ஐக் கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் ஹிருணிகா தெரிவித் துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தா வது:-

நாடு பெரும் பொரு ளாதார நெருக்கடிக் கும் சவால்களுக்கும் முகங்கொடுத்திருக் கும் சூழ்நிலையில் மக் களை இராணுவத்தைக் கொண்டு அடக்குவேன் என்று கூறும் ஜனாதிபதி பின்செயற்பாடு ஜனநா யகத்துக்கு விரோதமான தாகும்.

ஹிட்லர் போன்ற தலை வர்களால் ஒரு நாட்டை நீண்டகாலம் ஆட்சி செய்ய முடியாது. ரணில் மக்களை போராட்டத்தில் ஈடுபடவேண்டாம் என வும், கூச்சலிட வேண் டாம் எனவும் தெரிவிக் கின்றார். இது சிறந்த தலைவர் ஒருவருடைய பண்பல்ல. ஜனாதிபதி மற்றும் அரசாங்கம், நெருக்கடிகளால் பாதிக் கப்பட்டுள்ள மக்களுக்கு வழங்கக்கூடிய தீர்வும் இதுவல்ல. முதலில் நாட்டு மக்களுடைய பிரச்சினைகளைக் கண்டறிய வேண்டும். பின்னர் அதற்குத் தீர் வைப் பெற்றுக்கொடுக் கவேண்டும்.

முதலில் ஏன் அப்பாவி மக்கள் வீதிக்கு இறங்கி ப்போராடுகிறார்கள் என்பதை அறியவேண் டும். பசியின் காரண மாகவே அவர்கள் இவ் வாறு போராடுகிறார் கள். நாட்டு மக்களின் வாழ்க்கை தற்போது அச்சுறுத்தலை எதிர் கொண்டுள்ளது. அதன் காரணமாகவே அவர் கள் போராடுகிறார்கள் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

பொருளாதார நெருக் கடிகளைத் தாங்கிக் கொள்ள முடியாமல் வீதி யில் இறங்கி போராடும் மக்களை இராணுவத் தைக் கொண்டு அடக் குவேன், அவசரகாலச் சட்டத்தை நடைமுறைப் படுத்துவேன் என்பது இதற்கான தீர்வல்ல. தலைவர்கள் காந்தி போன்று இருக்க வேண் டும். ஹிட்லர் போன் றல்ல - என்றார். (ம)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



பிறப்பு 08 - 10 - 1952

இறப்பு 30 - 10 - 2022

கடந்த 30.10.2022 அன்று சிவபதமடைந்த
எங்கள் குடுபத் தலைவி

## அமரர் கந்தசாமி கண்ணாம்பாள்

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (29.11.2022) செவ்வாய்க்கிழமை அதிகாலை அவரது இல்லத்தில் நடைபெற்று, தொண்டைமனாறு சந்நிதி புனித தீர்த்தக்கரையில் அஸ்தி கரைக்கப்படும். அதனைத்தொடர்ந்து வீட்டுக்கிருத்திய கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் முற்பகல் 10.00 மணியளவில் நடைபெறும். தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து காலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக
ஏற்றுக்கொள்ளவும்

ஆதிசிவன் வீதி,
குடமியன்.

குடும்பத்தினர்
077 933 6440
077 970 4542

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 03 - 03 - 1959

மறைவு 30 - 10 - 2022

அமரர் திருமதி

## மகேந்திரராஜா பத்மராணி (வவி)

எங்கள் அன்பின் திருவுருவே
எமை ஆளாக்கி வைத்துவிட்டு
எங்கு நீ சென்றாய் என
ஏங்கி நாம் தவிக்கின்றோம்
இன்னும் எத்தனை ஆண்டு போனாலும்
உன் நினைவு அகலாது எமைவிட்டு
உன் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்

உசன்,
மிருசுவில்.

குடும்பத்தினர்

# க.பொ.த.சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள்

கடந்த வாரம் வெளிவந்த க.பொ.த. சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறுகளில் பாடசாலைகள் ஊடாக கிடைத்த பெறுபேறுகளின் விவரம்:

### யா/மகாஜனக் கல்லூரி

**ஆங்கில மொழி மூலம்**

ரா.கௌதமன் - 9ஏ, சி.சிவானுஜா - 9ஏ, நீ.றொஷானி - 9ஏ, லி.சர்கேஷன் - 8ஏபி, கௌ.மகிழினி - 8ஏபி,

**தமிழ் மொழி மூலம்**

நி.கஜானன் - 9ஏ, ஆ.சாம்பவி - 9ஏ, சி.சிவனுஜா - 9ஏ, த.மதுமிலா - 9ஏ யோ.நிகேதன் - 8ஏபி, ச.டிலக் ஷன் - 8ஏபி, பா.குயிலன் - 8ஏபி, தே.பிரவீன் - 8ஏபி, நி.தனுசிகா - 8ஏபி, சி.கிருபாலினி - 8ஏபி, சி.அபிஷ்ணவி - 8ஏபி, கு.பிரதிக்ஷா - 8ஏபி, வ.அபி - 8ஏசி, த.அபிராம் - 7ஏ2பி, ச.கிருஜிகன் - 7ஏ2பி, கு.பிரவீன் - 7ஏ2பி, உ.திலானிகா - 7ஏ2பி, சி.ஸ்ரெபிகா - 7ஏ2பி, த.ரிஷானி - 7ஏ2பி, ச.லதுசியா - 7ஏ2பி, ர.மகிஷாயினி - 7ஏ2பி, ம.பவித்திரன் - 7ஏபிசி, துஷ்யந்தன் வர்சாயுதசர்மா - 6ஏ2பிசி, ர.பூவிழி - 6ஏ2பிசி, ச.விஷ்ணுகா - 6ஏ2பிசி, ந.டன்சிகா - 6ஏபி2சி, சி.மயூரதன் - 6ஏபிசிஎஸ், ச.சயந்தினி - 5ஏ4பி, வி.லவகுமார் - 5ஏ3பிசி, க.சாகித்தியன் - 5ஏ3பிசி, ஐ.டிலக்சன் - 5ஏ2பி2சி, ப.ஜேம்சன் - 5ஏ2பி2சி, ஜெ.மானிஷா - 5ஏ2பி2சி, கி.சானுஜா - 5ஏபி2சிஎஸ்.

### யா/இடைக்குறிச்சி ஸ்ரீசுப்பிரமணிய வித்தி.

சி.நிருஷன் - 9ஏ, வி.ஸ்ரீதரா - 5ஏ2பி2சி, வி.தமிழ்நிலவன் - 5ஏபி2சி, கி.லதுசன்- பி5சி 3எஸ், லி.பானுகன் - பி3சி3எஸ், லி.பானுகா - 2பி3சி4எஸ்.

### யா/கைதடி குருசாமி வித்தியாலயம்

வி.பிரசன்னா - 7ஏ2சி, ச.யக்சனா - 4ஏ2பி3சி, ம.கஸ்மிலா - 4ஏ2பி2சிஎஸ், இ.சிவதிகா - ஏபி2சி5எஸ், கு.தசானா - 2பி5எஸ்சி, ச.யபிசனா - பி4சிஎஸ், பா.பவிஷனா - பி2சி5எஸ், சி.கிஷானா - 3சி 5எஸ், சி.விருஸ்ணிகா - 2சி4எஸ்

### யா/சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி

பி.ததீசன் - 8ஏபி, வி.அக்சயா -7ஏபிசி, பி.பிரியந்தினி - 6ஏ2பிசி, கோ.ஜான்சன் - 6ஏ2பிசி, சி.ஜோயல்கேர்சோன் - 5ஏ2பி2சி, மோ.தாரகன் - 4ஏபி4சி, வி.சானுஜன் - 4ஏ2பி 2சிஸ்

### யா/உசன் இராமநாதன் ம.வி.

ந.ஹரிகரன் - 9ஏ, த.கஜானி - 8ஏபி, த.சுபநயன் - 4ஏ3பி2சி, து.பிரியங்கா - 4ஏ3பிஎஸ், பே.கவியரசி - 3ஏ3பிசி2எஸ், றி.றினோஜன் - 2ஏபி3சி3எஸ், வி.கார்த்திகா - ஏ2பி3சிஎஸ், ச.கயூர்னன் - ஏபி4சி2எஸ், ஜெ.கோபிகா - ஏபி4சிஎஸ், த.தனுஸ் - ஏ4சி3எஸ், கு.ஜான்சிகா - ஏ4சி4எஸ், ர.திருசா - 3பி3சிஎஸ், கு.அபிஷா - 2பி6சிஎஸ், யோ.தாருகா - 5 சி4எஸ், நி.நதீஸ் - 4சி2எஸ்

### யா/சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி

ஆர்.புவியழகி - 9ஏ, ஆர்.யதுசா-8ஏபி, ஏ.சாருஜா -7ஏபிசி, ஏ.அஜானா - 4ஏ3பி2சி, இ.ருத்திகா - 4ஏ2பி2சிஎஸ், எஸ்.அனுசியா - 3ஏ4பிசிஎ, ஆர்.பபித்தா - 3ஏ3பி3சி, ஆர்.கஜந்தி - 3ஏ2பி3சிஎஸ், என்.லொசானா -3ஏ2பி3சிஎஸ், கே.தர்சிகன் - 2ஏ4பி2சிஎஸ், ஆர்.சாமினி - 2ஏ3பி4சி, டி.டிலோமி - 2ஏ3பி2சி2எஸ், இ.டிஜிந்தன் - 2ஏபி4சி2எஸ்

### யா/விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயம்

இ.தர்சினி - 6ஏபி2சி, ஜெ.தமிழினி - 6ஏபிசிஎஸ், சி.சுஜானன்.- 5ஏ2பி2சி, ஜெ.தேனுஜா - 5ஏ2பி2சி, ர.திலக்ஸனா - 3ஏ2பி3சிஎஸ், ஷெ.தேவதன் - 2ஏ2பி4சி, அ.தர்மிகா - ஏ2பி3சி2எஸ், கு.வஜிரதா - 3பி4சி2எஸ், சு.வெரோணிக்கா - 5சி3எஸ்

### யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி

சி.கிருஷன் - 9ஏ, த.அருணன் - 9ஏ, பி.அபிராம் -9ஏ, ரா.டர்ஷனா - 9ஏ, மு.ரக்ஷனா - 9ஏ, ஞா.டோஜிகா - 9ஏ, சி.மோகனவாணி -9ஏ, சி.சாருகா - 9ஏ, சு.ஆர்திகா - 9ஏ, கோ.திலக்ஷிதா - 9ஏ, உ.நர்த்தகி - 9ஏ, கு.பானுஜா - 9ஏ, பி.சிபானி - 9ஏ, ஜெ.சாருமதி - 9ஏ, தி.கர்ஷனா - 9ஏ, அ.நர்த்தகி - 9ஏ, பு.கம்ஷாயினி - 9ஏ, தே.சஜிவனா - 9ஏ, க.வர்ஜிதா - 9ஏ, உ.கேனுஜா - 9ஏ, ப.சர்மிகா -9 ஏ, க.டிலக்ஷிகா - 9ஏ, ஞா.சதுர்ஷன் - 8ஏ.பி, இ.சரணிகன் - 8ஏ.பி ஜெ.அபிஷன் - 8ஏ.பி, சி.நிலக் ஷன் - 8ஏ.பி, சி.பரணிதன் - 8ஏ.பி, ஸ்ரீ.அருள்வாரனன் 8ஏ.பி, நி.மிதுஷகன் -8ஏ.பி, கி.சாகித்தன் - 8ஏ.பி, கோ.லக்ஷிகன் - 8ஏ.பி, ரா.தமிழன்பன் - 8ஏ.பி, தி.கர்ஷனா - 8ஏ.பி, ம.அஜனிகா - 8ஏ.பி, ஸ்ரீ.வைஸ்ணவி - 8ஏ.பி, நி.அபிஷனா - 8ஏ.பி, ந.கவிநயா -8ஏ.பி, க.கிருஷிகா -8ஏ.பி.

### யா/கொடிகாமம் அரசினர் வித்தியாலயம்

விரிசாளினி -3ஏ3பி3சி, சம்சிகா - 3பி, 3சி, 3எஸ், ராஜ்குமார் - 6சி, 2எஸ், லக்சன் - 4சி5எஸ்

### யா/வட்டு மத்திய கல்லூரி

சா.ரேனுஜா -9ஏ, க.சிவகாமி -8ஏசி, அ.டயானிகா - 6ஏபி2சி, கு.சானுஜா - 5ஏ2பி2சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஒட்டுசுட்டான் படுகொலைகள்: நினைவேந்தல் கடைப்பிடிப்பு!

முல்லைத்தீவு, நவ.29

முல்லைத்தீவு, ஒட்டுசுட்டானில் 1990ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27ஆம் திகதி யன்று இலங்கை இராணுவத்தினரின் விமானக் குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்ட 12 பொது மக்களின் 32ஆம் ஆண்டு நினைவேந்தல் நேற்றுமுன்தினம் கடைப்பிடிக்கப்பட்டது.



ஒட்டுசுட்டான் சிவன் கோவிலுக்கு முன்பாக இந்த நினைவேந்தல் நடைபெற்றது.

இந்தப் படுகொலைச் சம்பவத்தின்போது தந்தையையும், சகோதரரையும் இழந்த கண்ணன் என்பவர் பொதுச்சுடரை ஏற்றினார்.

அதைத் தொடர்ந்து படுகொலை செய்யப்பட்ட உறவுகளுக்கு பொதுச் சுடர் ஏற்றப்பட்டு, மலர் தூவி அஞ்சலி செலுத் தப்பட்டது. (எ-19)



## மின்சாரம் தாக்கி யானை உயிரிழப்பு

வவுனியா, நவ. 29

வவுனியா, புளியங்குளம், பரசங்குளம் பகுதியில் மின்சாரம் தாக்கி நேற்றுமுன் தினம் யானையொன்று உயிரிழந்துள் ளது. 35 வயதுடைய குறித்த யானை யின் சடலம் தொடர்பான பிரேதப் பரி சோதனை நேற்று நடைபெற்றது.

உயிரிழந்த காட்டு யானையின் மரணம் தொடர்பான உடற்கூற்றுப் பரி சோதனையை வன உயிரிகள் திணைக் களத்தின் வடமாகாணத்துக்குப் பொறுப் பான கால்நடை மருத்துவ அதிகாரி வைத் திய கலாநிதி பா.கிரிதரன் மேற் கொண் டிருந்தார்.

குறித்த யானை விவசாய நிலத்தில் பொருத்தப்பட்டிருந்த மின்சார வயரில் அகப்பட்டதாலேயே உயிரிழந்துள்ளது என்று விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் வவுனியா பரசங்குளம் பகுதியைச் சேர்ந்த 82 வயதுடைய ஒரு வர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப் பட்டதுடன் வவுனியா நீதிவான் நீதிமன் றில் முற்படுத்தப்பட்டார். (எ-110)

## கடற்படையால் நேற்றுக் கைது

யாழ்ப்பாணம், நவ. 29

நெடுந்தீவு கடற்பரப்புக்குள் அத்துமீறி உள்நுழைந்த 5 படகுகில் பயணித்த 25 இந்திய மீனவர்கள் கடற் படையினரால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர். தமிழகத்திலிருந்து நேற்றுக் காலை புறப்பட்ட இழு வைமடிப்படகுகளே இவ்வாறு நுழைந்துள்ளன.

பிடிக்கப்பட்ட படகுகள் மயிலிட்டித் துறைமுகத்துக்கு இன்று கொண்டு செல்லப்படவுள்ளன. (அ-ஓ-125)

## கடல் அட்டைப்பண்ணை அராலியில் வேண்டாம்

யாழ்ப்பாணம், நவ. 29

அராலியில் கடல் அட்டை பண்ணை அமைப்பதற்கு அந்தப் பகுதி மீனவர்கள் கடும் எதிர்ப்பு வெளியிட் டுள்ளனர்.'கடந்த சில நாள்களுக்கு முன்னர் இங்கே வருகை தந்த சிலர் எமது கடலில் அட்டைப் பண்ணை அமைப்பது தொடர்பில் ஆராய்ந்துள்ளனர். எமது வளங்களை அழிக்கும் இந்த முயற்சியை ஆதரிக்க மாட்டோம், கண்டிக்கின்றோம். தம்பாட்டி, பூநகரி போன்ற இடங்களில் அமைக்கப்பட்டுள்ள அட்டைப் பண்ணைகளால் அந்தப்பகுதி மக்களது வாழ்வாதா ரம் பாதிக்கப்பட்டுள்ளது. அவர்கள் பல நாள்களாக போராட்டம் செய்கின்றனர். அவர்களது குரல்களுக்கு செவிசாய்ப்பவர்கள் யாருமில்லை. அவர்களுக்கு ஏற்பட்டுள்ள இந்நிலையை எண்ணி வருந்துகின் றோம். அவர்களுக்கு எங்களது ஆதரவுகளைத் தெரிவிக்கின்றோம்' என்று அராலி மீனவர்கள் தெரி வித்துள்ளனர். (அ-ஓ-27)



முல்லைத்தீவு - மாந்தை கிழக்கு பிரதேச செய லகத்தின் கிராமசக்தி திட்டத்தின் ஆற்றல் விருத்தி பயிற்சிநெறியில் மேற்கொள்ளப்பட்ட, உற்பத்திப் பொருள்கள் காட்சிப்படுத்தலும் விற்பனைச் சந்தையும் பிரதேச செயலக கேட் போர் கூடத்தில் அண்மையில் இடம்பெற் றது. (ய-9)

## கைவிடப்பட்ட வீதிச்சீரமைப்பு போராட்டத்தில் பொதுமக்கள்

சாவகச்சேரி, நவ. 29

மீசாலை வடக்கு கமநல சேவைகள் நிலையத்துக்கு முன்பாக வீதி சீரமைப்புக்கென கடந்த வருடம் பறிக் கப்பட்ட கற்களை மீள எடுத்துச் செல்வதை கண்டித் துக் கடந்த சனிக்கிழமை பொதுமக்கள் ஆர்ப்பாட் டத்தில் ஈடுபட்டனர்.

நீண்டகாலமாக பொதுமக்களின் பாவனையிலி ருந்த அப்பக்கடை வீதி 2012ஆம் ஆண்டு தண்ட வாளம் புனரமைக்கப்பட்டபோது ஒருமீற்றர் தூரத் துக்கு உயர்த்தப்பட்டது. இதனால் மதகுகள் இன்றி வெள்ளம் வழிந்தோடாது வீதியால் மக்கள் பய ணிக்க முடியாத நிலை ஏற்பட்டது.

அதனையடுத்து பொதுமக்கள் விடுத்த தொடர் கோரிக்கைக்கமைய கடந்த வருடம் சாவகச்சேரி பிரதேச சபையால் நிதியொதுக்கீடு செய்யப்பட்டு வீதியைச் சீரமைக்க கற்கள் பறிக்கப்பட்டன.

எனினும், இதுவரை எவ்வித பணிகளும் முன்னெ டுக்கப்படாத நிலையில் கடந்த சனிக்கிழமை அங்கு வாகனத்தில் வந்தவர்கள் பறிக்கப்பட்ட கற்களை வாகனத்தில் மீள ஏற்றினர்.

பிரதேச சபையின் அறிவுறுத்தலுக்கமைய கற்கள் மீள ஏற்றப்படுகிறது என அவர்களால் தெரிவிக்கப் பட்டதையடுத்து மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதுதொடர்பில் சாவகச்சேரி பிரதேசசபையிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது, இந்த வீதிச் சீரமைப் புக்கென கடந்த வருடம் 5 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டது. கற்கள் பறிக்கப்பட்ட நிலையில் பொருள்களின் விலை அதிகரிப்பால் சீரமைப்புப் பணியை தொடர முடியவில்லை.

இதனாலேயே கற்களை மீள ஏற்ற பிரதேச சபை யால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது - என்று தெரி விக்கப்பட்டது. (ச-9)

## பொன்னாலை -அராலியில் காற்றாலை மின் உற்பத்தி

### மக்கள் மத்தியில் அறிவூட்ட திணைக்களங்களுக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், நவ. 29

காற்றாலை மின் உற்பத்திக் கோபுரங்கள் அமைக் கப்படுவதால் பாதிப்புக்கள் ஏற்படுமா என்ற மக்களின் சந்தேகங்களை துறைசார் திணைக்களத் தலைவர் கள் நேரில் சென்று தெளிவூட்டவேண்டும் என்று சங்கானை பிரதேச செயலகத்தில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

பொன்னாலை தொடக்கம் அராலி வரையிலான கடற்கரையோரத்தில் அரச காணியில் 15 இடங்களில் காற்றாலை மின் உற்பத்திக் கோபுரங்கள் தனியார் நிறுவனத்தால் அமைக்கப்படவுள்ளன.

இந்தக் கோபுரங்கள் அமைக்கப்படுவது தொடர்பில் சமூகமட்ட அமைப்புக்களைத் தெளிவூட்டும் கலந்து ரையாடல் சங்கானை பிரதேச செயலகத்தில் நேற்று இடம்பெற்றது.

வடக்கில் ஏனைய இடங்களில் காற்றாலை கோபுரங் கள் அமைக்கப்படும்போது அந்தப் பகுதி மக்கள் எதிர்ப்பு வெளியிட்டிருந்தனர். மீன்பிடி பாதிக்கப்ப டுமா?, பறவைகளுக்கு பாதிப்பு ஏற்படுமா? போன்ற சூழலியல் சந்தேகங்களை சமூகமட்ட அமைப்புக்கள் நேற்று எழுப்பியிருந்தன. அதற்கு துறைசார் அதிகா ரிகள் விளக்கமளித்தனர். இதனை ஏற்றுக்கொண்ட அவர்கள், இதே விளக்கங்களை கிராமங்களுக்குச் சென்று மக்களுக்கும் வழங்கவேண்டும் என்று கேட் டுக்கொண்டனர். அதற்கு துறைசார் அதிகாரிகள் இணங்கினர். (அ-ஓ-5,27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதிகளைப் புனரமையுங்கள் இன்று கவனவீர்ப்பு போராட்டம்

யாழ்ப்பாணம், நவ. 29

வலி.மேற்கில் உள்ள வீதிகளை தற்காலிகமாகவேனும் புனரமைக்குமாறு கோரிக்கை விடுத்து இன்று செவ்வாய்க்கிழமை சங்கானையிலும் மூளாயிலும் கவன வீர்ப்பு போராட்டங்கள் இடம்பெறவுள்ளன. காலை 8 மணி தொடக்கம் மு.ப. 10 மணி வரையான இரு மணி நேரம் இப்போராட்டம் இடம்பெறும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

வலிகாமம் மேற்கு பிரதேசத்தின் ஊடாகச் செல்லும் பெருந்தெருக்களே இதுவரை புனரமைக்கப்படாமல் உள்ளன. யாழ்ப்பாணம், மானிப்பாய் - காரைநகர் வீதி, மாவடி - மூளாய் வீதி, வட்டுக்கோட்டை - பொன்னாலை வீதி என்பன மோசமாகச் சேதமடைந்துள்ளன. இந்த வீதிகளுடாக மக்கள் போக்குவரத்துச் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இவ்வீதிகளை நிரந்தரமாகப் புனரமைக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரியும், மழை காலத்துக்கு முன்னர் தற்காலிகமாகவேனும் புனரமைப்புச் செய்யுமாறு கோரியும் இப்போராட்டம் இடம்பெறவுள்ளது.

சங்கானை பேருந்து நிலையத்துக்கு முன்பாகவும் மூளாய் அரசடிச் சந்தியிலும் போராட்டங்கள் இடம்பெறவுள்ளன. போராட்டத்தின்போது வீதிகள் முடக்கப்பட்டு போக்குவரத்துக்களும் தடைப்படும் எனவும் தெரிய வருகின்றது. (அ-ஒ-125)

## வியட்நாமில்...

எடுத்துள்ளதாகவும் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி நாடாளுமன்றில் நேற்றுத் தெரிவித்தார்.

302 இலங்கையர்கள் மீட்கப்பட்டு வியட்நாம் முகாம் ஒன்றில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இலங்கைக்கு திருப்பி அனுப்பக்கூடாது எனத் தெரிவித்து அவர்களில் இருவர் சனிட்டைசர் அருந்திய நிலையில், ஒருவர் உயிரிழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-இ)

## ஊசிமூலம்...

மற்றும் இதயத்தில் கிருமித்தொற்று ஏற்பட்டு நேற்று உயிரிழந்துள்ளான். இவனுடன் சேர்த்து இந்த ஆண்டு 13 பேர் உயிர்கொல்லி ஹெரோய்ன் பாவனையாளர்கள் உயிரிழந்துள்ளனர்.

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியொன்றில் வசிக்கும் 15 வயது மாணவன் கடும் காய்ச்சல் காரணமாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் கடந்தவாரம் சேர்க்கப்பட்டுள்ளான். அவசர சிகிச்சைப் பிரிவில் வைத்து சிகிச்சையளிக்கப்பட்டபோதும் நேற்று அந்த மாணவன் உயிரிழந்துள்ளான். மாணவனின் சடலத்தை நீதிவான் நேற்று நேரில் சென்று பார்வையிட்டு விசாரணைகளை மேற்கொண்டார்.

உயிர்கொல்லி ஹெரோய்னை ஊசிமூலம் இந்த மாணவன் பயன்படுத்தி வருகின்றமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (அ-ஒ-5)

## வீரியம்...

முன்னைய காலங்களில் யூரியா விசிறப்பட்ட ஒன்பது தினங்களில் நெற்பயிர்கள் வளர்ச்சியுடன் காணப்படும். ஆனால், இந்த ஆண்டு வழங்கப்பட்ட யூரியா உரம் விசிறப்பட்டு 15 நாள்களாகியும் எந்தவொரு முன்னேற்றத்தையும் பயிர்களில் காண முடியவில்லை என்று அவர்கள் கவலை வெளியிட்டனர்.

50 கிலோ யூரியா உரம் 10 ஆயிரம் ரூபா வீதம் பயிரிடப்பட்ட பரப்பளவுக்கேற்ப கமநல சேவைகள் நிலையத்தால் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. மூன்று கட்டங்களாக விநியோகிக்கப்பட்ட யூரியா உரத்தை அனைத்து நெற்செய்கையாளர்களும் பெற்றுப் பயன்படுத்தினர். ஆனால், முன்னைய காலங்கள் போன்று பயிர்களில் வளர்ச்சி காணப்படவில்லை.

யூரியா உரப் பொதியில் உற்பத்தித் திகதி மற்றும் காலாவதித் திகதி என்பன இல்லாமையால், காலாவதியான உரம் வழங்கப்பட்டதா என்ற சந்தேகத்தையும் விவசாயிகள் எழுப்பியுள்ளனர். (அ-ஒ-9)

## திருவெம்பாவையை...

நீதிமன்று தடை உத்தரவு வழங்கியுள்ளதாக சட்டத்தரணி வி.மணிவண்ணன் தெரிவித்தார்.

ஈழத்துச் சிதம்பரம் என அழைக்கப்படும் காரைநகர் சிவன் கோவிலின் திருவெம்பாவை உற்சவத்தை குழப்பும் வகையில், ஆலய தர்மகர்த்தாக்களில் ஒருவர் எதிர்வரும் 4 ஆம் திகதி பாலஸ்தாபனத்தை செய்யப் போவதாக அறிவித்ததால் அங்கு குழப்பமான சூழ்நிலை உருவாகியது.

திருவெம்பாவை உபயகாரர்களும், பக்தர்களும் திருவெம்பாவை உற்சவம் நடைபெறாமல் பாலஸ்தாபனம் செய்வது உகந்ததல்ல என்ற அடிப்படையில் பாலஸ்தாபனம் செய்யும் தீர்மானத்தை ஏற்றுக்கொள்ளவில்லை.

இவ்வாறானதொரு நிலையில் பாலஸ்தாபன நிகழ்வை எதிர்வரும் நாலாம் திகதி செய்யக்கூடாது என தடை உத்தரவு கோரி திருவெம்பாவை உபயத்தை மேற்கொள்கின்ற ஐந்து திருவிழா உபயகாரர்கள் ஊர்காவற்றுறை நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர்.

அந்த வழக்கிலே எதிர்வரும் நான்காம் திகதி செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த பாலஸ்தாபன நிகழ்வை தடை செய்வதாக ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்றத்தால் நேற்றுக் கட்டளை வழங்கப்பட்டுள்ளது.

நீதிமன்றத்திலே வழங்கப்பட்ட கட்டளை எதிராளிகளுக்கு அனுப்பப்படவுள்ளது. இந்த வழக்கு எதிர்வரும் 12ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது - என்றார் மணிவண்ணன். (அ-ஒ-26)

## வடக்கில்...

புறக்கணிப்பு போராட்டத்துக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் வடக்கு மாகாணத்திலுள்ள 7 சாலைகளின் ஊழியர்களும் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளனர். இதனால் வடக்கு மாகாணத்தில் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் எந்தவொரு சேவைகளும் இன்று இடம்பெறாது. (அ-ஒ-26)

## வேலியே...

கோப்பாய் பொலிஸ் நிலையத்திலும், முல்லைத்தீவு-ஐயன்கன்குளம் பொலிஸ் நிலையத்திலும் பணியாற்றும் இருவரே இவ்வாறு மக்களால் மடக்கிப்பிடிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் - முழவை சந்திக்கு அருகில் நேற்று திங்கட்கிழமை மாலை இடம்பெற்ற இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது:-

மோட்டார் சைக்கிளில் வந்த இரு பொலிஸ் அலுவலர்களும் நிலைதடுமாறி எதிரே வந்த வாகனத்துடன் மோதி விபத்துக்கு உள்ளாகியுள்ளனர். வாகனத்தின் முன்பக்கத்தில் சிறிய சேதம் ஏற்பட்டது.

விபத்துக்கு உள்ளான இரு பொலிஸ் அலுவலர்களும், வாகனத்தின் சாரதியுடன் தம்மை பொலிஸார் எனக் கூறி முரண்பட்டதுடன், அங்கிருந்துதப்பிச்செல்லமுற்பட்டனர். அதனை அவதானித்த மக்கள் இரு பொலிஸ் அலுவலர்களையும் மடக்கிப் பிடித்து, யாழ்ப்பாண பொலிஸாரிடம் கையளித்தனர்.

இரு பொலிஸ் அலுவலர்களும் மதுபோதையில் இருந்ததை உணர முடிந்ததாக சம்பவத்தில் நின்ற மக்கள் தெரிவித்ததுடன், கார் ஒன்றில் வன்முறைக் கும்பலை சம்பவ இடத்துக்கு இவர்கள் இருவரும் வரவழைத்ததாகவும், பொதுமக்கள் அவர்களையும் விரட்டியடித்தனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (அ-ஒ-26)

## இராணுவம்...

காயங்களுடன் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் இளைஞன் நேற்றிரவு தடுத்து வைக்கப்பட்டுள்ளான். பாலமுரளி நிறோசன் என்ற இளைஞனே இவ்வாறு தாக்கப்பட்டுள்ளான். மானிப்பாய் சந்திப்பகுதியில் பொலிஸார் வீதிச் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். வீதியால் மோட்டார் சைக்கிளில் சென்ற இளைஞன் ஒருவன் தலைக்கவசம் அணியவில்லை. பொலிஸார் மறித்தும் இளைஞன் நிற்காமல் சென்றுள்ளான். மானிப்பாய் அந்தோனியார் கோயில் அருகிலுள்ள ஒழுங்கையில் வைத்து இளைஞனை பொலிஸார் மடக்கியுள்ளனர். இதன்போது இளைஞன் தான் செய்தது தவறு என்று பொலிஸாரிடம் கூறியுள்ளான். அங்கு வந்த இளைஞனின் நண்பன், தலைக்கவசம் அணியாமல் சென்ற தவறுக்குரிய தண்டத்தை விதிக்குமாறு கோரியுள்ளான். அதற்கு அங்கு நின்ற பொலிஸார் இணங்கவில்லை. அங்கு வீதிப் போக்குவரத்துப் பொலிஸார் இல்லை என்பதைக் காரணம் கூறி ரோந்து கடமையிலிருந்த பொலிஸார் தண்டப்பற்றுச் சீட்டை வழங்கவில்லை. அங்கு வந்த இராணுவத்தினர் இளைஞனின் நண்பனான பாலமுரளி நிறோசனின் நெஞ்சில் பிடித்து தள்ளியுள்ளனர். அவரும் இராணுவத்தினரை தள்ளியுள்ளார். அந்த நேரத்தில் வீதியால் சென்ற 3 விசேட அதிரடிப் படையினரும் அங்கு வந்து நிறோசன் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர். தன்னை விடுமாறு நிறோசன் அபயக் குரல் எழுப்பியபோதும் வீதியில் வைத்து இராணுவத்தினரும், விசேட அதிரடிப்படையினரும் மூர்க்கமாக அவரைத் தாக்கிவிட்டு மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர். அவர் காயங்களுடன் மானிப்பாய் பொலிஸ் நிலையத்திலேயே தடுத்து வைக்கப்பட்டுள்ளார். மருத்துவமனைக்கு நேற்று இரவு வரையில் கொண்டு செல்லப்படவில்லை. (அ-ஒ-5)

## சிங்கள...

நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

2023 ஆம் ஆண்டுக்கான பாதீட்டின் மூன்றாம் வாசிப்பு மீதான குழுநிலை விவாதத்தின்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

'வடக்கு - கிழக்கில் சில இடங்களில் இராணுவத்தினர் சிறுசிறு இடையூறுகள் ஏற்பட்டிருந்தபோதிலும், பெரும்பாலான இடங்களில் அஞ்சலி நிகழ்வுகள் அமைதியான முறையில் இடம்பெற்றன. ஜனாதிபதி மற்றும் சிங்கள சகோதரர்கள் மத்தியில் தமிழ் மக்களின் உணர்வுகள் தொடர்பில் ஏற்பட்ட புரிதலால் இது சாத்தியமானது. இதனைச் சரியாகப் புரிந்து கொண்ட சிங்கள சகோதரர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் நிச்சயம் நன்றி தெரிவிக்கவேண்டும். இதுவே நல்லிணக்கத்தின் முதல் படியாகும். எனினும், பல துயிலும் இல்லங்கள் இன்னும் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிலேயே உள்ளன. அவற்றை விடுவித்து மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து, அவர்களுக்கு அஞ்சலி செலுத்த வாய்ப்பை அரசாங்கம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்' என்றும் சிறீதரன் கோரிக்கை விடுத்தார். (அ-ஒ-இ)

## மஹவ...

ரயில் மார்க்கத்தின் புனரமைப்பு பணி காரணமாக இந்த் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டு ஜனவரி 15ஆம் திகதி முதல் ரயில் போக்குவரத்து இடைநிறுத்தப்படவுள்ளதாகவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ-ஒ-இ)

## பேச்சு...

பட்ஜெட் விவாதம் முடிவடைந்த பின்னர் இனப்பிரச்சினை தீர்வு தொடர்பில் சர்வகட்சி கூட்டம் நடத்தப்படும் என்று ஜனாதிபதி ரணில் நாடாளுமன்றில் தெரிவித்திருந்தார். இது தொடர்பில் ஆராய்ந்த தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் மூன்று நிபந்தனைகளை விதித்திருந்தனர். இது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கொழும்புச் செய்தியாளர் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

'பேச்சு ஆரம்பிக்க முன்னரே நிபந்தனைகளை முன்வைக்காதீர்கள். முதலில் பேச்சு மேசைக்கு வாருங்கள். பேச்சு மேசையில் பேசி, தீர்வு தொடர்பில் முடிவு எடுப்போம். என்ன பிரச்சினை என்றாலும் பேச்சு மூலம்தான் நல்ல தீர்வு கிடைக்கும். கிடைத்த நல்ல சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தத் தமிழ்த் தலைவர்கள் முன்வர வேண்டும். கடந்த காலத் தவறுகளை மீண்டும் இழைக்காதீர்கள்' என்று ரணில் குறிப்பிட்டுள்ளார். (அ-ஒ-5-22)


## மரண அறிவித்தல்



### சங்கரப்பிள்ளை அபிராமிப்பிள்ளை

நெடுந்தீவு மேற்கு 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், நல்லூர் செட்டித்தெருவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சங்கரப்பிள்ளை அபிராமிப்பிள்ளை அவர்கள் நேற்று (28.11.2022) திங்கட்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 22015)1-6


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்கா செல்கின்றார் வெளிவிவகார அமைச்சர்

கொழும்பு, நவ. 29

பொருளாதார நெருக்கடி தொடர்பில் பேச்சு நடத்துவதற்காக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி இன்று அமெரிக்காவுக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

அமெரிக்காவின் இராஜாங்கச் செயலர் அன்ரனி பிளிங்டன் உள்ளிட்ட பல முக்கியஸ்தர்களை இந்தப் பயணத்தின் போது அவர் சந்தித்து கலந்துரையாடவுள்ளார். சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியுடனான பேச்சுகள் இந்தப் பயணத்தின்போது கூடுதல் கவனம் செலுத்தப்படும். (ம)

# பஸிலின் வியூகத்தால் பெரமுன மீண்டெழும்

## கூறுகிறார் சாகர காரியவசம்

பெரமுனவை வெற்றிநடைபோட வைப்பதற்கான வியூகங்களை பஸில் ராஜபக்ச தற்போது துரிதகதியில் வகுத்து வருகின்றார், விரைவில் நாம் வீறுநடைபோடுவோம். இவ்வாறு பெரமுனவின் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகச் சந்திப்பில் சாகர காரியவசம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:- அரசமைப்பின் 21ஆவது திருத்தச் சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முன்னரே நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை பஸில் ராஜபக்ச துறந்துவிட்டார். ஆயினும் அவரது அரசியல் பயணம் தொடரும். தற்போது எமது வெற்றிப் பயணத்துக்கான வியூகம் வகுக்கப்பட்டு வருகின்றது.

நாம் மீண்டும் பலமான சக்தியாக எழுவோம். எந்தவொரு தேர்தல் நடத்தப்பட்டாலும் தனித்து போட்டியிடக்கூடிய வல்லமை எம் வசம் உள்ளது. அதேபோல கூட்டணி அமைத்து போட்டியிடுவதற்கும் பின்நிற்கப்போவதில்லை. மக்களின் தேவைப்பாடு அறிந்து அதற்கேற்ப முடிவு எடுக்கப்படும் - என்றார். (ச-44)

# விலகிச் செல்லும் விமானிகள் நெருக்கடியில் விமானச் சேவை

கொழும்பு, நவ.29

சிறிலங்கன் எயார் லைன்ஸில் பணிபுரியும் சுமார் 40 விமானிகள் விரைவில் விமான சேவையை விட்டு வெளியேறத் தீர்மானித்துள்ளனர் என்று தகவல் வெளியாகியுள்ளது. அதேநேரம், அங்கு பணிபுரிந்த 30 விமானிகள் ஏற்கனவே வேறு விமான நிறுவனங்களில் இணைந்துள்ளனர் என்றும் தெரிய வந்துள்ளது.

நிறுவனத்தின் முகாமைத்துவப் பிரிவின் தலைவர் புத்திக மன்னகே என்ற பெண்ணின் செயற்பாடு காரணமாகவே பெரும்பாலான விமானிகள் விமானச் சேவையை விட்டு வெளியேறியுள்ளனர் எனக் கூறப்படுகின்றது.

விமானிகளுக்கு அவரிடமிருந்து பல்வேறு இடை யூறுகள் ஏற்பட்டுள்ளது என்றும், 282ஆக இருக்கும் சிறிலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்துக்குச் சொந்தமான விமானிகளின் எண்ணிக்கை அடுத்த சில மாதங்களில் 200 ஐ விடக்குறையும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

விமானிகள் பற்றாக்குறையால் இலங்கை விமானங்களின் பயண நேர அட்டவணை இரத்துச் செய்யப்படும் நிலை ஏற்பட்டுள்ளது என்றும், இலங்கை விமானங்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளதால், ஒவ்வொரு விமான நிலையத்திலும் இலங்கை விமானங்களுக்கு ஒதுக்கப்பட்ட விமானங்களை நிறுத்தும் வசதிகள் இழக்கப்படும் அபாயம் உள்ளது என்றும் கூறப்படுகின்றது. இது இலங்கைக்குக் கிடைக்கும் அந்நிய செலாவணியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது. (எ-இ)


**யாழ். வீட்டு அப்பம்**
**5 AM - 8 AM**

பாரம்பரிய முறையான கைக்குத்தரிசி மாவினால் விறகுக்கரி அடுப்பில் வீட்டில் தயாரிக்கப்படுகின்றது.

இல.141, பாங்ஷால் வீதி, யாழ்ப்பாணம்.
(சின்னக்கடை சந்தைக்கு அருகாமையில்)
077-4245954 / 074-0071864

**சதாபொன்ஸ்**
**கல்வி நிலையம்**
மாலிசந்தி - அல்வாய்

**புதிய வகுப்புக்கள் ஆரம்பம்**
**A/L வர்த்தகப்பிரிவு-2024**
**01/12/2022-பி.ப 3.00 மணிமுதல்**
- கணக்கீடு திரு.V.பகீரதன்
- வணிகக் கல்வி திரு.T.லோகேஸ்
- பொருளியல் திரு.V.ஜெகதீஸ்

2023 பிரிவு வகுப்புகள் நடைபெறுகின்றன

அனுமதிகளை இன்றுமுதல் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

விபரங்களுக்கு:
021 226 3206, 077 9250 105, 077 3095 176
இயக்குனர்.

**வேலைவாய்ப்பு**

யாழ்.நகரில் இயங்கும் எமது நிறுவனத்திற்கு
**கிராபிக் டிசைனர் (Graphics Designer)** தேவை.
- முழுநேரம் / பகுதி நேரம் ( இரவு )
- பழக விரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம்.



ஆர்வமுள்ளவர்கள் உங்கள் சுயவிவரக் கோவையுடன் **நாளை (30.11.2022) புதன்கிழமை மாலை 5.00 மணிமுதல் 8.00 மணிவரை நேரில் சமூகம்தரவும்.**

**உதயன் பணிமனை**
**361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

**பொருளியற் கல்லூரி**
நாவலர் வீதி யாழ்ப்பாணம்.

**மாபெரும் கருத்தரங்கு தொடர்**

**தமிழ்**
**A/L 2022**

வளவாளர்
**திரு.N.சத்தியவேந்தன்**
**B.A(Hons)Tamil SPL., M.Phil (Tamil)**

**ஆரம்பம்:30/11/2022**
**9.00 am - 1.00 pm**
- 15 தினங்கள் நடைபெறும்.
- கையேடுகள் வழங்கப்படும்.
- பரீட்சை எதிர்பார்ப்பு விடயங்கள்.
- வெளி மாணவர்களும் பங்குபற்றலாம்.
- அனுமதிகள் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு: **077 379 5460**
**077 3763 511**


# மரண அறிவித்தல்

தோற்றம் 09 . 07 . 1940



மறைவு 25 . 11 . 2022

**திரு.அம்பலம் சுப்பையா**
**(கட்டடக் கலைஞர்)**

நயினாதீவு 7ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திரு.அம்பலம் சுப்பையா (கட்டடக் கலைஞர்) அவர்கள் கடந்த (25.11.2022) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அம்பலம் இராமாசி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லையா பொன்னம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும், தங்கமணியின் ஆருயிர் கணவரும், காலஞ்சென்ற அருள்மலர் மற்றும் சிவசோதி, கலைவாணி (லண்டன்), சர்வேஸ்வரன், ஜெயஸ்ரீ (ஆசிரியர், வேலணை சரஸ்வதி வித்தியாலயம்), லோகேஸ்வரன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், வெள்ளைச்சாமி (மோகன்), ஜெயசீலன் (லண்டன்), அருளினி (முன்பள்ளி ஆசிரியர், புளியங்கூடல்), பிரபாகரன் (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேச செயலகம் - வேலணை), அஞ்சனா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், காலஞ்சென்றவர்களான சொக்கலிங்கம், நாகமணி, பழனிவேல் மற்றும் செல்லம்மா ஆகியோரின் பாசமிகு சகோதரரும், சிவக்கொழுந்து, மங்களம், காலஞ்சென்ற வடிவேலு, ராசரெத்தினம் மற்றும் தவமணி, நீலாம்பாள், காலஞ்சென்ற தங்கரெத்தினம், யோகம்மா, செல்வராசா ஆகியோரின் மைத்துனரும், கீர்த்தனா, கீர்த்தனன், சாருஜன் (லண்டன்), சதுர்ஷா (லண்டன்), சங்கவி, சாகித்தியன், நிவேதியன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.11.2022) புதன்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நயினாதீவு சல்லிபரவை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

7ஆம் வட்டாரம்,
நயினாதீவு.

தகவல்: குடும்பத்தினர்.
076 3980 377
074 1212 192

(CS 22016) 1/6


**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் கைதடி A9 பிரதான வீதியுடன் 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

**நிலப்பரப்பு.**
- நல்ல தண்ணீரூற்றுச் சூழல்
- அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும்
- வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.

**பார்வையிடும் நேரம்:-**
- காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை

தரகர் தேவையில்லை.

**தொடர்பு:- ஜெயம்**
**077 814 7389**
**077 986 5457**


செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 மின்னஞ்சல் : news@uthayan.com விளம்பரம்: advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 29.11.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org